விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 17 சனிக்கிழமை (01.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 194

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கொள்ளையர்கள் சுட்டதில் இளம் பெண் பரிதாப மரணம்

### அத்தியடியில் அதிகாலை பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

கொள்ளையர்கள் சுட்டதில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப் பயங்கர சம்பவம் நேற்று அதிகாலை 12.30மணியளவில் யாழ்.அத்தியடிப் புது வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது; அத்தியடி புதுவீதியிலுள்ள பொன்னையா என்பவரது வீட்டிற்குள் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் நுழைந்த ஆயுதம் தாங்கிய திருடர்கள் அவ்வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்தனர்.

உள் நுழைந்த அவர்கள் அங்கிருந்தவர்களை கடுமையாகத் தாக்கி கொள்ளையில் ஈடுபட்டனர். அவ்வேளை கொள்ளை இடம்பெற்ற வீட்டிலிருந்தவர்களால் சற்றுத் தொலைவில் உள்ள உறவினர்களுக்கு தொலை பேசிமூலம் திருட்டு முயற்சி தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்த சதாசிவம் நவலட்சுமி(வயது-34) மற்றும் அவரது தந்தை காசிப்பிள்ளை சதாசிவம் (வயது-80) ஆகிய இருவரும் கொள்ளை நடைபெற்ற வீட்டை நோக்கி விரைந்தனர்.

அவ்வேளை இருபது பவுண் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு வெளியேறிய திருடர்கள் பிரஸ்தாப இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர்.

அவ்வேளை ச.நவலட்சுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது தந்தை படுகாயமடைந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை-அம்பாறையில் இருவர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருமலை சாம்பல்தீவுப் பகுதியில் இளைஞர்ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர் தலைக்கவசம் இல்லாமல் சென்றதாகக் கூறி தடுக்கப்பட்டதாகவும் அவர் வண்டியை நிறுத்தாமல் சென்றதால் சுட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமதியம் 12.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்ட இளைஞரின் விபரம் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளைஅம்பாறை காரைதீவில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரால் ஜெயந்தன் (வயது -30) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காரைதீவு முதலாம் குறிச்சியிலுள்ள அவரின் வீட்டிற்கு நேற்று மதியம் 12.30 மணியளவில் சென்றவர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (ச-5)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க ஜனாதிபதி தீவிர ஆலோசனை

## நிலைமை மோசமானதையடுத்து நடவடிக்கை

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நேரடிப் பேச்சை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு தரப்பினரிடமும் ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.நாட்டின் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஆதரித்தால் பாரிய ஆர்ப்பாட்டம் செய்வோம்

### ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு சர்வதேச சமூகம் ஆதரவளிப்பதை நிறுத்தாவிட்டால் கொழும்பிலுள்ள தூதரகங்கள் முன்பாக ஆயிரக்கணக்கான மக்களைக் கொண்டு போராட்டம் நடத்துவோம் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டு அமைப்பாளர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

இந்நாட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் சிப்பாய் பலி

அளவெட்டியில் நேற்றுக் காலை மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கித் தாக்குதலில் இரா ணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இராணுவத்தினருக்கு உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந் தவ ரே இத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.இதனையடுத்து அப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப் பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-5)

## அரச சேவையில் புதிதாக இணைபவர்களுக்கு தமிழ்-சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம்

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோக பூர்வ மொழித் திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் தன்னால் கொடுக்கப்பட்ட பிரேரணை இலங்கை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளதாக அரசியல் சட்ட விவகாரங்களுக்கான அமைச்சர் டி.ஈ.டபிள்யூ.குணசேகர தெரிவித்துள்ளார். குறிப்பாக தமிழ் மொழியை உத்தியோக பூர்வ மொழியாகப் பயன்படுத்தவும் தமிழ் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்கும் அரச ஊழியர்களுக்கு ஊக்கம்அளிக்கவும் பண வெகுமதிகள் அளிக்கவும் இந்தக் கருத்துருவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 13ஆவது சட்டத்திருத்தத்தின்படி தமி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.அலுவலகம்மீது கிரனைட் தாக்குதல்

மன்னாரிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம்மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் காவல் கடமையில் இருந்த பொலிஸார் ஒருவர்படுகாய மடைந்தார். (ச-5)

## ஆயுததாரிகளின் சூட்டில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

அராலி தெற்கைச் சேர்ந்த கடற்றொழிலாளியான எஸ்.விஜயராசா (வயது-53) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.இவர் ஏழு பிள்ளைகளின் தந்தையாவார்.

நேற்றுமுன்தினம் மாலை இவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற ஆயுததாரிகள் இருவர், இவரைவெளியே அழைத்து வந்து அருகிலுள்ள பனைமரக் காணி ஒன்றில் வைத்துச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கணவனும் மனைவியும் கடத்தப்பட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

பொலநறுவை வெலிக்கந்தைப் பகுதியில் கணவனும் மனைவியும் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கந்தை வடமுனையில் துணை இராணுவக் குழுவினராகிய கருணா குழுவினரால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் அருளையா மதி (வயது-30) மற்றும் அவரது மனைவி சுதா (வயது-25) ஆகியோர் எனத் தெரியவந்துள்ளது.

இருவரது சடலங்களும் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டதாகவும் சடலங்கள் இரண்டும் அழுகிய நிலையில் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அருளையா மதியின் உடலில் அவரது மனைவியின் உடை சுற்றி இருந்ததாகவும் அவரது மனைவி சுதா பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அப்பகுதிமக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ச-5)

# வரலாறு கண்ட வட்டுக்கோட்டைக் கண்ணகி அம்மன் ஆலயம்

வலிகாமம் மேற்கு வட்டுக் கோட்டையில் மூளாய் வீதியில் தெக்கணப்பாய் தலத்தில் கண்ண காம்பிகா சமேத கண்ணலிங்கேஸ் வர ஆலயம் என்று அழைக்கப் படும் வட்டுக்கோட்டைக் கண்ணகி அம்மன் ஆலயம் பூர்வீக வரலாறு சொல்லும் திருத்தலமாகப் பல புரா தன இலச்சனைகளைக் கொண்டு விளங்குகிறது.

கி.பி.பன்னிரண்டாம் நூற் றாண் டில் ஆரிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள திருவையாறிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இராமநாதப்பட்டர் என்பவர் வட்டுக்கோட்டை கிராமத்தின் மேற் குப் பகுதியில் குடியேறினார். சிறந்த சிவனடியாராகிய இவருக்கு இறைவி காட்டிய திருக்குறிப்பிலேயே தனக் குக் கிடைத்த கண்ணகி அம்மன் திரு வுருவைத் தெக்கணப்பாய் என்னும் புண்ணிய பூமியிலே கோயிலாக எழுந்தருளச் செய்து பூஜை வழிபாடுகள் ஆற்றி வந்தார்.

இவ் ஆலயத்தினை பதின் மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதி யில் (1240ஆம் ஆண்டளவில் கூழாங்கைச் சக்கரவர்த்தி காலத் தில் மந்திரி சபையில் அங்கம் வகித்த காசிபர் கோத்திரம் பித்தர் குலத்தில் வந்துதித்த வேத விற் பன்னர் சுப்பிரமணிய சாஸ்திரியும் அவரது முன்னோரும்பின்னோரு மான பிரம்ம ஸ்ரீ வெங் கடேஸ் வரக்குருக்கள், இராமசாமி சாஸ்திரி கள், நாகேசபாரதி, நாகேஸ்வர ஐயர், சிவசுப்பிரமணிய சிவாச்சாரி யார், ஆனந்த சுப்பிரமணிய சர்மா, குருமூர்த்தி ஐயர் ஆகியோர் இவ் ஆலயத்தின் பூசையினையும் பரிபாலனங்களையும் மேற்கொண் டனர். இவ் ஆலயம் 1513ஆம் ஆண் டளவில் பிரம்ம ஸ்ரீ வெங்கடேஸ் வரக்குருக்களால் திருத்திப் பெரி தாகக்கட்டப்பட்டது.

*மாதா கோயில்*

போர்த்துக் கேயர் கி.பி.1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து 1619ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றித் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த போது தமது சமயத்தைப் பரப்பும் ஆர்வத்தில் சைவக் கோயில்களை இடித்து அழித்து தம் வணக்கஸ் தலங்களைத் தாபித்தனர். ஏறக் குறைய கி.பி.1621ஆம் ஆண்டள வில் இக் கோயிலையும் அழிக்க முற்பட்டபோது இங்கிருந்த அடிய வர்கள், பெரியோர்கள் எல்லோரும் அன்னையாக (மாதாவாக) விளங் குபவள் எழுந்தருளியிருக்கும் ஆல யம் ஆதலால் இக் கோயில் மாதா கோயில் என்று கூறினார்கள். இதன் காரணமாக போர்த்துக் கேயப்படைகள் இக் கோயிலை அழிக்காது அதனை வணங்கிச் சென்றனர். இதனால் இவ் ஆலயம் அன்றிலிருந்து இன்றுவரை மாதா கோயில் என்றும் வழங்கப்பட்டு வருவதை இன்றும் காணக்கூடி யதாக உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப் புரட்சியின் பயனாக கண் ணகி வழிபாட்டு முறை ஈழத்தில் படிப்படியாக குறைந்து கண்ணகி ஆலயங்கள் அம்மன் ஆலயங் களாக மாறத் தொடங்கின. இத் தாக்கம் இவ்வாலயத்திற்கும் ஏற்பட் டது. கி.பி.1882ஆம் ஆண்டு பிரம்ம ஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச் சாரியார் ஆலயத் தைத் திருத்திக் கட்டி மூலஸ் தானத்தில் சிவ லிங்கத்தையும் பிரதிஸ்டைசெய்து எழுந்தருளச்செய் தார். முன்புகிழக்கு நோக்கி வீற்றி ருந்த கண்ணகி அம்மனை வட பாகத்திலே பிர திஸ்டை செய்து எழுந்தருளச் செய்தார். காலப்போக்கிலே இவ் ஆலயத்தில் மாற்றம் செய்யப் பட வேண்டும் என்றும் மூலஸ் தானத் திலே எழுந்தருளியிருக்கின்ற இலிங் கத்தினுடைய சக்தியாக மீனாட்சி யம்மன் ஆலயவடபாகத்தில் அமைக் கப்படவேண்டும் என்றும் கண்ணகி அம்மனுக்குத் தனியாக ஆலயம் அமைத்துக் கிழக்கு நோக்கி எழுந் தருளச் செய்யவேண்டும் என்றும் சிவாச்சாரியார்களாலும் சமயப்பெரி யோர்களாலும் சுட்டிக் காட்டப்பட்ட தன் பலனாக 2003 ஆம் ஆண்டு இத்தகைய மாற்றம் செய்யப்பட்டு கண்ணகி அம்மனுக்குத் தனியாக ஆலயம் அமைக் கப்பெற்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சண்டேஸ்வரர் கோவில் இல்லாத தால் நிவர்த்தி பண்ணிப் புதிய ஆல யம் அமைக் கப்பட்டது.

இங்கு நூறு வருடங்களிற்கு முற்பட்ட மிகப் பிரமாண்டமான குதிரை வாகனம் இன்றும் உயி ரோவியமாகக் காணப்படுவதுடன் இவ் வாகனத்தில் வருடாந்த மகோற் சவத்தின் எட்டாம் நாளாகிய வேட் டைத்திருவிழாவின்போதும் மாம்பூ உற்சவத்தின் போதும் இறை வன் எழுந்தருளுகின்றமை இன் றும் காணக்கூடியதாக உள்ளது.

*வருடாந்த மகோற்சவம்*

இவ் ஆலயத்தின் வளீகத்தி லுள்ள கண்ணகி அம்மனுக்கு பங்குனி கடைசித் திங்களை தேர் உற்சவமாகக் கொண்டு பத்து நாட் கள் அலங்காரத்திரு விழா நடை பெற்று வருகின்றது. அதேபோன்று கண்ணகாம்பிகை சமேதராக வீற் றிருக்கின்ற கண்ணலிங்கேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் ஆனி உத் தரத்தினை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்துத்தினங்கள் மகோற் சவம் நடைபெற்று வருகின்றது.

*ஆலயப் பரிபாலன சபையும் தொண்டர் சபையும்*

பிரம்ம ஸ்ரீ குருமூர்த்தி ஐயர் காலத்தில் 1975ஆம் ஆண்டு திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டு ஆலயத்தினை உள்ளூர் வெளி யூர் அடியார்களின் நிதியுதவி யுடன் புனருத்தானம் செய்யப் பட்டு திருப்பணிகளையும் பரிபால னங்களையும் இச்சபை மேற் கொண்டு வந்தது. பிரம்ம ஸ்ரீ குரு மூர்த்தி ஐயரின் வேண்டு கோள் படி 1983ஆம் ஆண்டு திருப் பணிச் சபை பரிபாலன சபை என பெயர் மாற்றப்பட்டுத் தொடர்ந்தும் பரிபாலனங்களை மேற்கொண்டு வருகின்றது. இச் சபைக்கு உதவி யாக இச்சபையின் கீழ் 1990ஆம் ஆண்டு தொண்டர்சபை ஸ்தாபிக் கப்பட்டு பரிபாலன சபைக்கு உத வியாகச் செயற்பட்டு வருகின்றது.

*புராதன சின்னங்கள்*

இவ் ஆலய பழைமையை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சின் னமாக தீர்த்தக்கேணி கி.பி. 1865ஆம் ஆண்டு பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவாச்சாரியா ரால் ஆலயத்தின் மேற்கு வீதியில் கட்டப்பட்டு அதற்கு அருகில் இளைப் பாற்று மண்டபமும் ஸ்தாபிக்கப்பட் டது. இம் மண்டபம் காலப் போக் கில் அழிவடைந்து போனாலும் தீர்த்தக் கேணி 1999ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டு வழமைபோல் வருடாந்த தீர்த்த உற்சவம், சிவ ராத்திரி, திருவெம் பாவை, நடே சர் அபிஷேகம் ஆகிய தினங்களில் தீர்த்தமாடப்பட்டு வருகின்றது.

*பரிபாலனசபையின் பணிகள்*

*சமயப் பணிகள்*

* ஆலய நித்திய, நைமித்திய பூசைகளை நடத்துவிப்பதும் மகோற்சவம் மற்றும் விசேட உற் சவங்களில் அன்னதானம் வழங்கி வருதலும்;
* அயல் கோவில்களுக்குச் சென்று பல சமூகப்பணிகளைச் செய்து வருதல்;
* ஆகம விதிமுறைகளுக்கு மாறாக இருந்த கண்ணகி அம்ம னுக்கு தனியான கோயில் அமைத் துப் பங்குனி மாதம் கடைசித் திங் கள் தொடங்கி பத்து நாட்கள் அலங் காரத்திருவிழா நடைபெறுகின்றது;
* மகா மண்டபத்திலுள்ள முரு கன், வள்ளி, தெய்வயானை, மகா விஷ்ணு, பூமாதேவி, ஸ்ரீ தேவி, லிங் கோற்பவர் பரிவார மூர்த்தி களுக்கு உள் வீதியில் கோவில்கள் அமைத் துச் சண்டேஸ்வரர் இல்லாத ஆல யத்தில் புதிதாக கோவில் அமைத் ததுடன் நடேச சபை நவக்கிரகம், உள் வீதியில் வைரவர் கோவில் களும் அமைத்து 2003ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத் தப்பட்டது.
* அறநெறிப்பாடசாலை 2003 தை 9ஆம் திகதி ஆரம்பித்து பண்ணிசை, ஆங்கிலம் முதலிய பாடங்களும் கற்பிக்கப் படுவதுடன் பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை ஈட்டி வருகிறார்கள்.
* பாடைந்த தீர்த்தக் கேணி யின் பெரும்பகுதி சிரமதானம் மூலம் திருத்திப் புனரமைக்கப் பட்டுள்ளது.

*சமூகப் பணிகள்*

* பிரேத ஊர்தி அமைத்து பொதுமக்களின் சேவைக்கு வழங் வருவதுடன் மங்கள, அமங்கல நிகழ்வுகளில் எல்லா உதவிகளை யும் புரிந்து வருவது.
* ஏழை மக்களின் பிள்ளை களுக்குக் கல்வியூட்டும் நோக் டன் மாதாந்தக் கொடுப்பன வழங்கப்படுவதுடன் வயோதி மற்றும் நோயினால் பீடிக்கப் டவர்களிற்கும் சிறு தொகை பண மாதாந்தம் வழங்கி வருதல் சம பணி புரிபவரை இனம் கண்டு கௌரவித்தல்.
* குடிநீர் வழங்குவதற்கு வச திகளைச் செய்து வருதல் மோ டார் பாவிப்பதற்கு குடிநீர் வி யோகிப்பவருக்கு மாதக் கொடு பனவு ஆலய உற்சவங்களில் போது மூலிகைகளால் தயாரிக் கப்பட்ட மருந்து இலவசமாக விநி யோகித்தல்.
* சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான உண வுப் பொருட்கள் மற்றும் அத்தியா வசிய ஆடைகள் வழங்கப்பட்டன. மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கியது. அங்க வீனமுள்ளவ ருக்கு சென்றவருடம் மாதாந்த கொடுப்பனவு.

*அறநெறிப்பாடசாலை*

மாணவர்கள் மிகுந்த ஊக்கத் துடன் படித்து வருவதுடன் மகா சிவராத்திரி போன்ற தினங்களி லும் பல்வேறு பஜனை நிகழ்வுக ளிலும் பங்குபற்றி வருகின்றார் கள். செவ்வாய், வெள்ளிக்கிழமை களில் பஜனை நடைபெறுகிறது. வருடாந்தம் பன்னிரு திருமுறை களை ஓதி வருவதும் மாதாந்த மூல நட்சத்திரத்தில் திருவாசக முற்றோதல் நடைபெறுகின்றது.

## இராசி பலன்

**01.07.2006**
**(ஆனி 17, சனிக்கிழமை)**
**சஷ்டி பின்னிரவு 5.37 மணிவரை**
**பூரம் பின்னிரவு 3.15 மணிவரை**
**இராகுகாலம் 8.56-10.26 மணிவரை**
**சுபநேரம் 2.56-4.26 மணிவரை**
**குமார சஷ்டி விரதம்**
**இரவு நடேசர் அபிஷேகம்**

| | |
|---|---|
| மேடம் | சிறுவியாதி, பெரியோர் உதவி, தாழ்ந்த சுபர்வம், பூர்வபுண்ணிய கருமம். |
| இடபம் | ரோகநிலை, மனப்பயம், சகோதரர் உதவி, புதிய விடயம். |
| மிதுனம் | பிரயாண நன்மை, அன்னியர் சந்திப்பு, சுவாரஸ்யம், காரிய ஜெயம். |
| கடகம் | தனவிரயம், முயற்சி தாமதம், குடும்பக் கவலை, விதண்டாவாதம். |
| சிங்கம் | பெரியோர் ஆதரவு, தேகநலன், தொழில் நன்மை, நல்ல முயற்சி. |
| கன்னி | புகழ், சயனசுகக்குறைவு, உறவினர் மனஸ்தாபம், பிரயாணம். |
| துலாம் | போசனசுகம், குடும்பசுகம், பெருமைய டைதல், சுபநிகழ்வு. |
| விருச்சிகம் | கடினஉழைப்பு, நண்பர்கள் உதவி, காரிய நன்மை, அதிகாரம். |
| தனுசு | பிததரோகம், நிர்ப்பந்த நிலை, பிரயாணம, முயற்சி தாமதம். |
| மகரம் | நண்பர்கள் வெறுப்பு, காரியதடங்கல், அபகீர்த்தி, போசனசுகம். |
| கும்பம் | அபூர்வ சந்திப்பு, தொழில் முயற்சி, உடல்நலம், சுபசெய்தி. |
| மீனம் | சத்துரு ஜெயம், போசனசுகம், செய் தொழில் விருத்தி, பணவருவாய். |

- வளவன்

## நயினாதீவு தெற்கில் அடிக்கடி இடம்பெறும் மின்சாரத்தடை

நயினாதீவு தெற்கில் இரவு மின்சார விநியோகம் கடந்த ஒரு மாதகாலமாக இரவு 7.00 மணியில் இருந்து இரவு 9.00 மணி வரை நயினாதீவு மின்சார நிலையத்தினூடாக இடைநிறுத்தப்படுகின்றதாக தெரி விக்கப்படுகின் றது.

இது தொடர்பாக மின்சார சபை உத்தியோகத்தர் களிடம் வினவிய போது மின்பிறப்பாக்கி அதிக வெப் பம் அடைவதால் தொடர்ச்சியாக நயினாதீவு தெற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்க முடியாது உள்ளது எனக் கூறிவருகின்றனர்.

இம் மின்சாரத்தடையால் நயினாதீவு பொது ஸ்தாபனமான வைத்தியசாலை, வர்த்தகநிலையங்கள், ஆலயங்கள் மற்றும் அன்றாட மின்சார பாவனை யாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக தற்பொழுது ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மகோற்ச வம் நடைபெறுவதால் மக்கள் பெரும்சிர மத்திற்கு உள்ளாகிவருகின்றனர். இதனால் கூடிய விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மின்சார விநியோகத்தைச் சீர்செய்யுமாறு மக்கள் கேட்டுள்ளனர். (க)

## புளொட் உறுப்பினர் மீது துப்பாக்கிச்சூடு

வவுனியா கோவிற்குளம் பகுதியிலுள்ள புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரனின் கல்லறைப் பகுதியைச் சுத்தம் செய்யும் பணியிலிருந்த மாணிக் கராஜா என்ற அவ்வமைப்பின் உறுப்பினரொரு வர் சைக்கிலில் வந்த அடையாளம் தெரியாத ஒருவரி னால் கடந்த புதன்கிழமை மாலை சுடப்பட்டதாக வவு னியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். வயிற்றுப் பகுதிகளிலும், காலிலும் காயமடைந்த இவர் வவு னியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர். (க-5)

## களியாட்ட நிலையங்களை சுற்றிவளைக்க நடவடிக்கை

சட்டவிரோதமாக இயங்கும் களியாட்ட, கேளிக்கை நிலையங் களை சுற்றிவளைக்கும் நடவடிக் கைகளைப் பொலிஸார் தீவிரப் படுத்தியுள்ளனர்.

கடந்த சனியன்று கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் கட்ட டத் தொகுதி ஒன்றில் திடீர் முற்று கையிட்ட பொலிஸார் அங்கு தங் கியிருந்த இருபது யுவதிகளை கைதுசெய்தனர்.

விபச்சாரம், உடல் பிடித்து வி தல் ஆகிய நடவடிக்கை களுக் இந்த யுவதிகளை பயன்படு திய தாக சந்தேகிக்கப்படும். கட டச் சொந்தக்காரர்களும் பா காப்பு அதிகாரிகளும் பொலிஸ ரின் வலையில் சிக்கினர். (க-)


அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சுவாமி கோவில் மஹோற்சவம்



11 ஆம் நாள் 01.07.2006
(தேர்த் திருவிழா)



வேலவா நாலருள்வாய்!

சேயிழை வள்ளியம்மை சேது தற் தேவயானை
ஞாயின வாழ்வினால் போர் எண்ணியார்
எண்ணினாரோ!
மாயிழை மைந்தர் மூவர் மலமதை நீக்கியாண்ட
வேயுளில் வேல்தரித்த வேலனே நாலருள்வாய்!

இயர்வாணன்

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய்

# கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர்

## பரிபாலனசபைத் தலைவர் ஆசியுரை

பழமை பொருந்திய புதுமை மிக்க இவ் வாலயத்தில் ஆன்மீக வளர்ச்சி ஓங்கி வளர்வதையும் இளம் சமுதாயத்தினர் அறநெறிப் பாடசாலை மூலம் சைவசமயத்தில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாலயம் மூலம் சமூகத்திற்கு பல தொண்டுகள் தாங்கள் செய்து வருவது போற்றத்தக்கது.

மேன்மேலும் இவ்வாலயம் வளர்ச்சியடையவும் மக்கள் சாந்தியும் சமாதானமும் பெற கண்ணகாலிங்கேஸ்வரனின் திருக்கடாச்சரம் கிட்டட்டும்.

*க.விசுவநாதன் ஜே.பி*


## சாந்தியும் சமாதானமும் மலர வேண்டுகின்றோம்

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணம் வட்டுமாநகரில் தெக்கணப்பாய் என்னும் பதியில் கோயில்கொண்டு அடியார்களுக்கு அருள்பாலித்து வரும் கண்ணாகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் இன்று ரதபவனி வருகின்றார்.

எம்பெருமானின் ரதபவனியால் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் கிடைக்கப் பெற்று சுபீட்சமான வாழ்வு பெற வேண்டுகின்றோம்.

ஓம் நமசிவாய நம

*சி !சாந்தன்*
*தொண்டர்சபைச் செயலாளர்*



## அன்னையவள் பாதம் தொழுவீர்

அன்னையவள் தேரேறி அல்லல் அறுக்க - வல்ல
லிங்கப் பெருமானுடன் வலம் வருவாள் - அள்ளி
அருள்தந்து ஆனந்தப் பெருவாழ்வுதந்து - அன்பர்
துயர் அகற்றி அருள்மழை சொரிந்து - எல்லை
இல்லா துயர் அகற்றி எம்பெருமாட்டி - [illegible]ணணகி
அருகிருந்து கடைக்கண்பார்வை தர - சூலவரும்
வினை அத்தனையும் சூழத்தால் அவள் - அகற்ற
வல்லலிங்கப் பெருமானுடன் தேரேறி வரும்
அன்னையவள் பாதம் தொழுது பாவமதை போக்கிடுவீர்.

*நா.அகிலன்*
*செயலாளர், ஆலய பரிபாலன சபை.*

## தொண்டர்சபைத் தலைவரின் ஆசியுரை

வட்டுக்கோட்டையில் கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானின் தேர் உற்சவம் இன்றாகும். இவ்வாலயம் சரித்திரப் பிரசித்தி பெற்ற தொன்மையான ஆலயமாகும். போர்த்துக்கீசர் இவ்வாலயத்தை அழிக்க முற்பட்டபோது மாதா கோயிலாக கருதியதால் இடிக்காது வணங்கிச் சென்ற ஆலயமாகும்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்', 'கோயில் அழியக் குடியும் அழியும்' போன்ற வாக்கிற்கமைய இவ்வூர் மக்கள் இவ்வாலயத்தை ஆன்மீக ரீதியாக சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர்.

இவ்வூர் மக்கள் அறநெறியில் வாழவும் எம்பெருமானின் திருவருளை பெற்றுய்யவும் தொண்டர் சபையினராகிய நாம் எம்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

*சி.கௌரிதரன்*
*தலைவர்,*
*தொண்டர்சபை.*

**01.07.2006 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தேர்த்திருவிழா**


மைக்குறோ ரவர்

*CD க்கள், பிரதிகள் *போட்டோக் கொப்பி
*லெமினேற்றிங் *CD Writing
என்பவற்றுக்கு
மைக்குறோ ரவர் மியூசிக் & கொம்பியூட்டர் சென்ரர்
தெல்லிப்பழை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

ஒளிக்கதிர் அழகு மாடம்

- பாடசாலை உபகரணங்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- இலத்திரனியல் உபகரணங்கள்
- Kit Card வகைகள்
- அன்பளிப்பு பொருட்கள்
- பாதணிகள்
- போட்டோ பிரதி எடுத்தல்

யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
ஒளிக்கதிர் அழகு மாடம்
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை. T.P:- 0777492106, 0773144741

கரன் ஸ்ரோர்ஸ்

தரமான சகலவிதமான பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும், நிதானமான விலையில் பெற்றுக்கொள்ள
கரன் ஸ்ரோர்ஸ்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

Cyber Video Vision

VIDEO EDITING
GRAPHIC DESIGNING
சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கு
Cyber வீடியோ விஷன்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. T.P:- 0777779367

R.S.T

NO:1 றோஸ் நாடு வகைகளுக்கு
பாலன் அரிசி ஆலை
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
T.P:- 0602212624

அம்பாள் ஸ்ரோர்ஸ்

✤Shell Gas,
✤ பலசரக்குப் பொருட்கள்
✤ அபிசேகப் பொருட்கள்
✤ சீமெந்து வகைகள்
என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
வட்டுக்கோட்டை செல்காஸ் முகவர்
அம்பாள் ஸ்ரோர்ஸ்
அற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை.



ஐங்கரன் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்

✦ சீமெந்து, மணல், கற்கள், கம்பிகள், காட்டுத் தடிகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளவும்
✦ கட்டட ஒப்பந்தகாரர்களும் சகலவிதமான வாகன வசதிகளையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
ஐங்கரன் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

## இன்று ஒரு தகவல்

# கோபம்-ஒரு விளக்கம்

“எனக்கு யாரைப் பார்த்தாலும் எரிச்சலாக வருகிறது சார்” என்று சொல்வார் ஒருவர். அவர் எப்போதும் கோபத்திலேயே இருக்கக் கூடிய ஒரு ஆசாமி. இப்படிப்பட்டவர்களை யாரும் நெருங்கமாட்டார்கள்.. இவர்களுக்கு இருக்கும் பேரும் புகழும் போய்விடும்.

மகாவீரர் என்ன சொல்கிறார் தெரியுமா? கோபம் வந்துவிட்டால் மனிதனுக்குப் பிறநலன்கள் தெரிவதே இல்லை என்கிறார். அதுமட்டுமல்ல. “கோபம் வரும்போது... நமக்குப் பிரியமானவர்கள் கூட ஓர் இமைப்பொழுதில் பகைவர்களாக ஆகிவிடுகிறார்கள்” என்கிறார்.

தீ என்ன செய்கிறது? எரியக்கூடிய பொருட்களை எரித்துவிட்டுத்தான் அவிந்துபோய்விடுகிறது. அதுபோல் கோபம் என்ன செய்கிறதென்றால் மனிதனை அழித்துவிட்டு அதுவும் அடங்கிப்போய் விடுகிறது. மகாவீரரின் இந்தக் கருத்தை விளக்குவதுபோல் சுவாமி சின்மயானந்தர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

அலுவலகம் ஒன்றில் உத்தியோகம் பார்க்கும் ஒருவர் காலையிலிருந்து கடுமையான வேலை... பலவிதமான பிரச்சினைகள்... அந்த சமயம் பார்த்து மனேஜர் அவரைக் கூப்பிட்டார். இவரைப் பிடித்து வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார். இவர் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு தன் இடத்திற்கு வந்தார். வேலை ஓடவில்லை. யாரைப் பார்த்தாலும் கோபமாக வந்தது. அட்டெண்டார் மீது சீறிவிழுந்தார். அந்த ஊழியரும் எதிர்த்துப் பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

மனேஜர் எப்போது புறப்படுவார் என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கிளம்பியவுடன் இவர் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினார். வழக்கமாக வீட்டுக்குப் பஸ்ஸில் செல்பவர் நடந்தே கிளம்பிவிட்டார். மனம் குமுறிக்கொண்டே இருந்தது. நேரில் எதிர்த்துப் பேச முடியாத மனேஜரை மனதிற்குள் எதிர்த்து சண்டைபிடித்துக் கொண்டு வந்தார்.

வீட்டு வாசலில் அவரது குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் அப்பா வருவதைப் பார்த்ததும் “அப்பா வருகிறார்...அப்பா வருகிறார்” என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடிப்போய் அம்மாவிடம் சொன்னார்கள். அவரது மனைவி ஜன்னல் வழியாக இவரைப் பார்த்தார். மிகவும் கோபமாக வருவது தெரிந்தது.

இந்தநேரம் பிள்ளைகள் வாசலில் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தால் அடித்தாலும் அடித்து விடுவார் என்று பயந்துகொண்டு பிள்ளைகளை பக்கத்து வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டார். அவர் வந்தார். வாசலில் பிள்ளைகளின் சத்தமில்லை. அமைதியாக இருந்தது. அவருடைய கோபத்திற்கு வடிகால் கிடைக்கவில்லை. சத்தம் போட்டால் தானே திட்டமுடியும்?

வாசல் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. அது மூடியிருந்தாலும் “ஏன் திறந்து வைக்கவில்லை” என்று சத்தம் போடலாம்.அதற்கும் சான்ஸ் இல்லை. வீடு சுத்தமாக துப்புரவாக வைக்கப்பட்டிருந்தது. அந்தந்தப் பொருட்கள் அந்தந்த இடத்தில் இருந்தது. அதனால் “என்ன இது... வீடு இருக்கும் லட்சணம்” என்று சத்தம் போடலாம் என்றால் அதற்கும் சந்தர்ப்பம் இல்லை.

அவர் வழக்கமாக அமரும் கதிரைக்கு மேல் மின்விசிறி சரியான அளவுக்குப் போடப்பட்டிருந்தது. ஐந்து நிமிடம் உட்கார்ந்தார். பின்பு எழுந்து போய் உடை மாற்றினார். குழாயடியில் தண்ணீர் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் கிண்ணம். கால்முகம் கழுவுவதிலும் ஒரு குறையுமில்லை. மனைவியிடம் கோபிக்க வழியே இல்லை. திரும்பி வந்தார். நாற்காலியில் அமர்ந்தார். எதிரில் உள்ள மேசையில் தேநீர் வைக்கப்பட்டிருந்தது. அதுவும் சரியான சூட்டில் இருந்தது. மிகவும் ஆறவும் இல்லை. ஆவி பறக்கவுமில்லை. இங்கும் அவரால் எரிந்து விழ முடியவில்லை. என்ன செய்வது?

தேநீரை குடிக்க ஆரம்பித்தார். சீனி இல்லை. அப்பாடா சான்ஸ் கிடைத்துவிட்டது. “அடியேய் எங்கே தொலைந்து போனாய்?” என்று கத்தினார் . “என்ன வேண்டும்?” என்று சமையல் அறையிலிருந்து நிதானமாகக் கேட்டார் மனைவி. “வெளியே வந்து கேட்பதுதானே...நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு வந்திருக்கிறேன். எனக்குத் தேநீர் தரும் லட்சணமா இது? ஏன் சீனிபோடவில்லை. உங்கள் பாட்டன் வீட்டு சொத்தா குறைந்து விடும்” என்று கத்த ஆரம்பித்தார்.

அந்த அம்மா அலட்டாமல் நடந்து வந்தார். “கோப்பையில் கிடந்த ஸ்பூனால் தேநீரைக் கலக்கி விட்டுப் பேசாமல் போய்விட்டார். இவர் இப்போது தேநீரை எடுத்துக் குடித்தார். இனிப்பு அளவாக இருந்தது. சீனி அடியில் கிடந்திருக்கிறது. அதைக் கலக்காமல் குடித்திருக்கிறார் அவ்வளவு தான்.

வாழ்வில் மகிழ்ச்சி என்பது இப்படித்தான் மறைந்து கிடக்கிறது... தேநீருக்கு அடியில் சீனி கிடப்பது போல. அதை உண்மையாக அனுபவித்து சந்தோஷப்பட வேண்டுமென்றால் மனதை அவ்வப்போது சோதனைசெய்து கலக்கி அந்த இனிமையை வெளியே கொண்டுவர வேண்டியிருக்கிறது என்கிறார் சுவாமி சின்மயானந்தர்.

“கோபம் வந்துவிட்டால் மனிதனுக்குப் பிறத்தியாரின் குண நலன்கள் தெரிவதே இல்லை” என்று மகாவீரரின் வாக்கு எவ்வளவு பெரிய உண்மை என்பது இந்தக் கதையிலிருந்து தெரிகிறதா இல்லையா?

ஒருவர் சொன்னார் “சார் எனக்குத் திருமணமாகி ஏழு வருடம் ஆகிறது. என் மனைவி கோபத்தில் என்னை எவ்வளவு தான் திட்டினாலும் பதிலுக்கு நான் திட்டியதே இல்லை” என்றார் .“ அது எப்படி முடியும் உங்களால்?” என்றேன். “பதிலுக்கு நான் திட்டுவதற்கு இதுவரையில் அவள் எனக்கு சந்தர்ப்பம் தரவில்லை. அவள் நிறுத்தினால் தானே நான் ஆரம்பிக்கமுடியும்” என்றார்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# இனவாதத்தையும், மதவாதத்தையும் இலங்கையிலிருந்து விரட்ட வேண்டும்!

## புரட்சிகர திரைக்கலைச் சங்க நிறுவுனர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இனவாதமும், மதவாதமும் தத்துவ வறுமையின் வெளிப்பாடே ஆயினும் இலங்கையிலிருந்து இந்த இரண்டையும் விரட்டாத வரை இலங்கைக்கு விடிவு இல்லை என சலனசித்திரம் எனும் புரட்சிகர திரைக் கலைச் சங்க நிறுவுனர் க.தேவதாசன் விடுத்த செய்திக் குறிப்பு.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உழைக்கும் வர்க்கம், அடக்கப்பட்ட இனங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் சமூக ஜனநாயக இலங்கைக் குடியரசு ஒன்று நிறுவப்பட வேண்டும்.

அங்கு, சுதேசிய உற்பத்தி மற்றும் சுய தேவைப் பூர்த்திக்காகப் பங்களிக்கும் தேசியத் தனியார் துறையினரின் நலன் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, மதச்சார்பற்ற அரசாகவும் அது இருக்க வேண்டும். இவற்றை முன்னிறுத்தி இலங்கையின் இறைமை, சுதேசிய எழுச்சி, இன விடுதலை, சமூக சுதந் திரம், தனிமனித உரிமை என்பவற்றை உள்ளடக்கியதான சமூக ஜனநாயக இலங்கைக் குடியரசு ஒன்றுக்கான புதிய அரசியலமைப்பு எழுதப்பட வேண்டும்.

இன விவகாரத்தைப் பொறுத்தவரை,

1. இரண்டு மாநில சுயாட்சிகள் கொண்ட கூட்டாட்சி ஒன்றியமாக இலங்கையை மாற்றுதல் (வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு சுயாட்சியும், ஏனைய ஏழு மாகாணங்கள் இணைந்த இன்னொரு சுயாட்சியாகவும் இது இருத்தல்)

2. வடக்கு -கிழக்கில் மாநில சுயாட்சிக்குள் முஸ்லிம்களுக்கான தனியலகு ஒன்றும், அதுபோலவே தெற்கு - மேற்கு மாநில சுயாட்சிக்குள் மலையக மக்களுக்கான தனியலகுஒன்றும்உருவாக்குதல்.

3. இரு மாநில சுயாட்சிகள் இரு தனியலகுகள் ஆகியவற்றில் சனத்தொகையில் பெரிய இனம் தவிர்ந்த பிற இனங்களின் அனைத்து உரிமைக்கும் உத்தரவாதமளித்தல்.

சமூக ஜனநாயக இலங்கைக் குடியரசுக்கான புதிய அரசியலமைப்பு மேற்சொன்ன விதமாக வரையப்பட வேண்டும் என்பதில் ஒத்த கருத்துள்ளவர்கள் ஒன்றுகூடிப் பேசிய பின்னர் தத்தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடி முன்னேற்றகரமான முடிவொன்றைக் கண்டடைய வேண்டும்.

உலக மயமாக்கல், திறந்த பொருளாதாரம் என்பவற்றின் பெயரால் வல்லரசு நாடுகளின் ஆதிக்கத்துக்கு அடங்கிச் சுயம் இழந்து கொண்டிருக்கும் எமது நாட்டை அந்த ஆபத்திலிருந்து மீட்டெடுத்து, ‘‘யுத்தமில்லாத- வறுமையில்லாத சுதந்திர நாடு’’ என்ற இலக்கை அடைய வேண்டுமானால் சமூக ஜனநாயக இலங்கைக் குடியரசு ஒன்றை நிறுவுவதைத் தவிர வேறுவழி எதுவுமே இல்லை.

அந்நிய ஏகாதிபத்தியச் சுரண்டலுக்காக வடிவமைக்கப்பட்ட ‘‘ஒற்றையாட்சி இலங்கை’’க் கோட்பாட்டை கண்மூடித்தனமாகக் கட்டிக்காக்கச் சபதமிடுவதும், மக்களைவிட மண்ணே-மண் மட்டும் முக்கியமானதென முழங் குவதும் வெறுத்தொதுக்கப்பட வேண்டிய இனவாதமே அன்றி வேறு இல்லை.

இதுபோலவே, கடவுளின் பெயரால் மகத்தானது மதம் மதம் மட்டுமே என உரத்துக் கூவியபடி மக்களை அடிமைப்படுத்துவதும் அழித்தொழிப்பதும் மதவாதமே அன்றி வேறு இல்லை. இனவாதமும் மதவாதமும் தத்துவ வறுமையின் வெளப்பாடே ஆயினும் இலங்கையிலிருந்து இந்த இரண்டையும் விரட்டாதவரை இலங்கைக்கு விடிவு இல்லை. இலங்கையின் சக்திமிக்க தொழிற்சங்கங்களும் சிங்கள/தமிழ்/முஸ்லிம் அரசியற் கட்சிகளும் சமூக இயக்கங்களும் இனியும் தாமதியாது இவ்விடயம் பற்றிச் சிந்தித்துச் செயற்பட முன்வரவேண்டும் என்றுள்ளது. (க)

# சுயலாபத்திற்காக தேசிய பாதுகாப்பை விலை பேசவேண்டாம் -ஹெகலியரம்புக்வெல

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமையை வைத்து சிலர் அரசியல் இலாபம் தேட முனைந்துள்ளனர். இதுமுற்றிலும் தவறானது. தேசியப் பாதுகாப்பு விடயத்தில் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இது நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கு மாத்திரம் உரியதன்று என திட்ட அமுலாக்கல் அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கத்தின் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்த அமைச்சர் தொடர்ந்து கூறுகையில்,

இது ஒரு கட்சியினதோ, அமைப்பினதோ பிரச்சினையல்ல. இது தேசிய பிரச்சினை. இதில் சகலரும் கரிசனை காட்டவேண்டும். மக்கள் இதுபோன்ற சுயலாபம் தேடுகின்றவர்களை நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கு இதுவிடயத்தில் கூடிய பங்கு உண்டு. அவர்கள் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செய்திகளை வெளியிட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தாக்குதல்களை முறியடிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. சந்தேகத்திற்கிடமான விடயங்கள் பற்றிய தகவல்களை பொதுமக்கள் உடனடியாக பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்க முன்வரவேண்டும். பொய்யான வதந்திகள் பரப்புபவர்களையும் சட்டத்தின் முன் கொண்டுவர பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பினால் அண்மையில் பாரிய அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டன. தேசிய பாதுகாப்பில் பொதுமக்கள் தான் பிரதானமானவர்கள் என அவர் சுட்டிக்காட்டினார். (தே)

# தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதியில் கட்டாக்காலி மாடுகளை பிடித்தல்

## தடைசெய்யுமாறு இராணுவத்துக்கு மகஜர்

இதுவரை மீளக்குடியேற அனுமதிக்கப்படாத தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளை வெளியார் சிலர் பிடித்துச் செல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களின் சார்பாக மறவன்புலோ-சாவகச்சேரி விவசாயிகள் சம்மேளனம் மறவன்புலோ-தனங்கிளப்பு கட்டளைத் தளபதியூடாக தென்மராட்சி படைத் தளபதிக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

‘‘உயர் பாதுகாப்பு வலயம் என்னும் பெயரின் காரணமாக இன்னமும் மேற்படி பகுதிகளில் அப் பகுதி மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத நிலையில், அவர்களது வாழ்வுக்கும் விவசாயத் துக்கும் உறுதுணையான கால்நடைகள் சாவகச்சேரி-நுணாவில் ரயில் பாதைகளிலும் கைதடி-நாவற்குழி, மறவன்புலோ பகுதிகளிலும் சிலரால் பிடிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர் அனுமதிக்கப்படும் வரை அப் பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிறர் பிடிப்பதை தடைசெய்து அவை அங்கு வாழ படைத்தரப்பு அனுமதிக்க வேண்டும்.

கால்நடைகளின்சொந்தக்காரர்களென யாராவது அங்கு மாடுகளைப் பிடிக்கவும் கொண்டு செல்லவும் அனுமதி கோரினால் மாட்டின் அடையாளம், கிராம சேவையாளர், விவசாய சம்மேளனம் உறுதிசெய்த கடிதம் ஆகியவற்றை சமர்ப் பிக்காமல் அனுமதி வழங்க வேண்டாம்.

அப்பகுதிகளில்கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்தல், கொண்டு செல்லல் ஆகிய சட்டவிரோதமான செயல் களை தடைசெய்யவேண்டும்’’ என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# உயர்தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு தொலைக்கல்வி



(கொழும்பு)

உயர்தரத்தில் சித்தியடையத் தவறியவர்களுக்கு தொலைக்கல்வி நவீனமயப்படுத்தும் திட்டம் அரிய வாய்ப்பாகும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார். பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் போதிய வசதிகளில்லாததால் வரையறுக்கப்பட்ட மாணவர்களே வருடா வருடம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுகிறார்கள்.

உயர்தரம் சித்தியடைவோரில் 7.5 வீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்றனர். அவர்களுள் 50 வீதத்தினரையே பல்கலைக்கழகங்கள் உள்வாங்குகின்றன. ஏனைய மாணவர்கள் உயர்கல்வி கற்க வாய்ப்பில்லாமல் அலையும் நிலையை இம்முறைமை நீக்கியுள்ளது. குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு இது வரப்பிரசாதமா கும் என அமைச்சர் மேலும் கூறினார்.

அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மேலும் கூறுகையில்,

தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் தொழில்நுட்ப வியூகங்களை நவீன மயப்படுத்துவதன் மூலம் இரண்டாம் நிலைக்கல்விக்கு பிந்திய கல்வி நிலையை அபிவிருத்தி செய்யமுடியும். அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைவதன் மூலம் உயர் தரத்தில் தவறிய மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க முடியும் என்றார். (க-7)

நேற்று முன்தினம் இரவு அத்தியடி புது வீதியில் கொள்ளை நடைபெற்ற வீட்டையும். அதன் ஜன்னல்கள் உடைக்கப்பட்ட நிலையையும். அவ்விடத்தில் பொலிஸ் விசாரணை நடைபெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)

# புலிகளுடன் தொடர்புடைய இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க கோருகிறது ஹெல உறுமய

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழித்தீர்வை காண்பதற்கான தருணம் இது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பதை கைவிட வேண்டும் அரசாங்கத்தின் மீது ஏற்கனவே விடுதலைப்புலிகள்போரைத் தொடங்கிய நிலையிலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்ற வார்த்தைகளை பிடித்துக் கொண்டு நிற்கின்றனர்.

சர்வதேச அழுத்தங்களால் உருவாக்கப்பட்ட பயனற்ற ஒப்பந்தத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உடனே செயற்படுத்த வேண்டும். சிங்கள சமூகத்திலும் விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய இராணுவத்தினர் மற்றும் அரச நிர்வாகத்தினர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கு எ[illegible]ரான பதில் தாக்குதல்கள் போதுமானது அல்ல. நன்கு திட்டமிட்ட உத்திகளுடன் பயங்கரவாதத்தை தோற்கடித்க வேண்டிய தேவையுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை விரைவில் சந்தித்துப் பேசவுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

# இலங்கை ஊடக நிறுவனங்களில் அரசியல் தலையீடுகள் உள்ளன

(கொழும்பு)

இலங்கையின் ஊடக நிறுவனங்களில் அரசியல் தலையீடுகள் இருப்பதாக சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடக சம்மேளனத்தின் தலைவர் உட்பட்ட குழுவினர் இலங்கையின் ஊட கத்துறை தொடர்பாகமேற்கொண்ட சந்திப்புக்கள் மற்றும் ஆய்வுகளின் பின்னர் நேற்று இந்தக் கருத்தை சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் கொழும்பில் வெளி யிட்டுள்ளது.

இலங்கையில் பல்லின சமூகத்தின் தன்மைக்கும் தேவைக்கும் ஏற்ப ஊடகத்துறை யொன்று கட்டியெழுப்பப்படவேண்டும். தனியானவர்த்தக நோக்கு மற்றும் அரசியலை நோக்காகக் கொண்டு ஊடகத்துறை தீர்மானிக்கப்படக் கூடாது என்று இந்த சம்மேளனம் கேட்டுள்ளது.

நீதியானதும் நடுநிலையானதுமான ஊடகத்துறை சிறந்த அரசு நிர்வாகத்திற்கும் வினைத்திறன் கொண்ட பொது நிர்வாகத்திற்கும் உறுதுணை புரியும். அத்துடன் இலங்கையில் நிலையான சமாதானத்திற்கும் அது இன்றியமையாதது. பொதுமக்களின் விருப்பை பிரதானபொறுப்பாக கொண்டு செயற்படும் தொலில் சார் ஊடகம் மிக முக்கியமானது.

இந்த நிலையில் பொதுமக்கள் சேவை ஊடகத்திற்கான அழைப்பையும் அச் சம்மேளனம் விடுத்துள்ளது. இதேவேளை, அரச ஊடகங்களைபொதுமக்கள் சேவை ஊடக நிறுவனங்களாக மாற்றுதல், இவற்றுக்கு சுதந்திர ஆசிரியர் பீடம் ஒன்றை ஏற்படுத்தல், செய்தி, கல்வி மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் உயர் நியமனங்களை அடைதல் மற்றும் ஊடகவியலாளர்களிடம் ஒழுக்கக் கோவை, உண்மைத் தன்மை, நடுநிலை சுயகட்டுப்பாடு போன்றவற்றை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற வற்றையும் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. (து-9)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம்

### புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான அறிவித்தல்

யாழ்.பல்கலைக்கழக விவ்சாயபீடத்திற்கு 2005/2006ஆம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டு பதிவுசெய்துள்ள முதலாம் வருட மாணவர்களுடன் பதில் உபவேந்தர் கலந்துரையாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இச்சந்திப்பு பல்கலைக்கழக நூல்நிலைய கேட்போர் கூடத்தில் 03.07.2006 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் மாணவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றார்கள்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

(348)



## சுவாமியே சரணம்



இணுவில்
## சிவதர்மசாஸ்த்தா ஆலயம்
(சிவன் கோயில் அருகாமையில்)

மேற்படி புதிய ஆலயம் அமைவதற்கு அடிக்கல் நாட்டு விழா 2-7-2006 நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் அனைத்து ஐயப்ப விரத அடியார்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

சரணம் ஐயப்பா

இங்ஙனம்,
ஐயப்பன் அடியான்
தா.வாசுதேவகுரு

(465)


# பதவியேற்பு வைபவம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 28ஆவது புதிய நிர்வாக உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் இன்றுமு.ப.11.00மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கேட்போர் கூடத்தில் லயன்ஸ் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக மாவட்ட இணைப்பாளர் லயன் வீ.எஸ்.சொக்க லிங்கமும் (சமாதான நீதவான்), சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் உபவேந்தர் பீ.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்துவுள்ளனர். (து)

# ஒரு பயனாளியின் உள்ளத்திலிருந்து...

**யாழ்ப்பாணம் ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தின் 18ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பயனாளி ஒருவரால் புனையப்பட்ட இக் கவிதை வெளியாகின்றது.**

வடக்கு கிழக்கு யுத்தமானது 1987 இலே
வக்கிரமாய் தறித்தது – எம்மவர் அவயத்தை
முழுமையாகப்பிறந்து முடமாகி முடங்கிடக்கும்
அவலநிலை ஏன் இறைவா என்று ஏங்கி
கொழும்பு சென்றும் கால் கொழுவிட முடியாது
தன் தேவைக்கு பிறர் முகம் நோக்கி
நின்ற எம் துயரம் உருக்கியது – அன்றைய
அன்னையர் முன்னணியின் உள்ளத்தை
அன்னையர் முன்னணியின் அயராத உழைப்பினாலும்
நோராட் நிறுவனத்தின் நேரிய நிதியினாலும்
கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் பேராதரவினாலும்
இற்றைக்கு 18 வருடங்களிற்கு முன்
1987 ஆடி ஒன்றிலே மொட்டாக முகிழ்ந்தாயே
யாழ் ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமே

மிதிவெடி எம் அவயத்தை தறித்திட
மெய் என்ற மேனியும் பொய்த்திட
கண்ணீருடன் கூரையைப்பார்த்து கிடந்த எம்மை
உம்பணியாளர் இருவர் தேடிவந்து
அஞ்சற்க ஜெய்ப்பூர் உளது – உம்
வாழ்விற்கு வளமூட்டுமென நம்பிக்கையூட்டுவது
எம் புனர்வாழ்விற்கு அடிக்கல் நாட்டுவதாகும்.

அவயவம் இழந்த நாம் பூமியில் தடம்பதிக்க
அவசரத்திற்கு அழகாய் நீ
பொருத்துகின்றாய் அவயவம்
படைக்கும் தொழில் பிரம்மாதான்
அலுமினியத்திலும் பிளாஸ்ரிக்கிலும்
அவயவம் ஆக்குகின்றானோ
உன் கைகளூடாக வியந்து நிற்கின்றோம்

போலியோவாம் பிறப்புவாசி நோயாம்
விபத்துக்கள் பலவாம்
எது எம் அவயவத்தை தாக்கி நின்ற போதும்
உறுதியாய் உடலுக்காகும் வண்ணம் நீ
பொருந்துகின்றாய் ஓர்த்தோசிஸ் எனும்
குறைபாட்டு நிவர்த்தி உறுப்பினை – அதனால்
யாம் பெற்றிடுவோமே உடலிற்கு ஓர் ஆதாரம்

வலுவிழந்தோர் வீணே முடங்கிக்கிடக்காது
வீட்டிலே நடமாட வீதி போய்வர – பணிபல புரிந்திட
சரியாக அளவிட்டு நோய்பிணிக்கேற்ப
புதிய புதிய தொழில்நுட்பம் புகுத்தி
உபயோகிப்பதற்கு இலகுவாய் உறுதியாய் நீ
உணர்ந்து தயாரித்து வழங்கிய
நடமாடும் உபகரணங்கள்தான் எத்தனை எத்தனை


உன்னை நாடி வந்த எம்மை உன் அலுவலக ஊழியர்
இன்முகத்துடன் வரவேற்பது முதல்
உன் புனர்வாழ்வுப்பணியாளர்
எம் அவயவத்தின் ஒவ்வோர் அசைவினையும்
பலத்தினையும் பரிசோதித்து
இயன்மருத்துவ சிகிச்சை அளித்து
கரம் பற்றி நடைப்பயிற்சி வழங்கி நிற்கின்றனர்.

அதுமட்டுமா விளம்பரமின்றி அடக்கத்துடன்
கிடைத்தற்கரிய விசேட வைத்திய ஆலோசனை
விரும்பமுடன் தங்கிட வீட்டினைப்போன்ற விடுதிவசதி
பயனடைந்த மாணவர்க்கு பரிவுடனே கல்வி ஊக்குவிப்புத்தொகை
மற்றையோர்க்கு சுழற்சிக்கடனுதவி வெளிக்களத்திலோ
தொடர்ப் பரிசோதனை செய்தும்
எம் குறை நீக்கி தேவை நிறைவேற்றினாய்

நீ உன் வயது பதினெட்டை அடைவதற்குள் உன் சேவைக்கு
வந்த இடர்பாடுகள் தான் எத்தனை எத்தனை
அத்தனையும் தாண்டி வலுவிழந்தோர் துயரடைதல் கூடாது
என எம் வாழ்வு இனிதே அமைய நீ ஆற்றும்
புனர்வாழ்வுப் பலனை இயல்புவாழ்க்கைக்கு
நாம் திரும்பிட நீ உழைக்கும் பயனை
அனுபவித்து மகிழ்வது நாமல்லவா!




# போர்த்துக்கலிடம் வெல்லுமா இங்கிலாந்து?



இன்று நடக்கும் காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து, போர்த்துக்கல் அணிகள் மோதுகின்றன.

உலக கோப்பை வரலாற்றில் இல்லாத அளவில் வீரர்களுக்குள் தாக்குதல் நடந்த நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்று காலிறுதியில் நுழைந்துள்ளது போர்த்துக்கல். அதேபோன்று ஆட்டத்தை காலிறுதியிலும் தொடர வாய்ப்புள்ளது என்பதால் இங்கிலாந்துக்கு பெரும் நெருக்கடி காத்திருக்கிறது.

### 40 ஆண்டு கனவு

இங்கிலாந்தைப் பொறுத்தவரை 40 ஆண்டுகளுக்கு முன் 1966இல் உலக கோப்பை வாங்கியது. அதன்பின்னர் இந்த அணிக்கு சோகக்கீதம்தான். 1970இல் காலிறுதி வரை முன்னேறியது. அடுத்த இரண்டு உலக கோப்பை போட்டியில் விளையாடுவதற்கு கூட தகுதி பெறவில்லை.

காலிறுதிப் போட்டியைப் பொறுத்தவரையில் இங்கிலாந்துக்கு ராசியில்லாத சுற்று என்றே கூற முடியும். இதற்கு முன் நடந்த 5 உலக கோப்பை போட்டிகளில் காலிறுதி சுற்றிலேயே கதை முடிந்திருக்கிறது.

1966, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் காலிறுதியைத் தாண்டியது. 1990இல் நான்காவது இடம்தான் கிடைத்தது. எனவே நீண்டகாலமாக கோப்பை கனவில் இருக்கும் ரசிகர்களின் ஆவலை பூர்த்திசெய்ய வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து அணி உள்ளது. ஆகவே இம்முறை வாய்ப்பை நழுவ விடாமலிருக்க முயற்சிகள் மேற்கொள்ளும்.

முதல் சுற்றில் நடந்த மூன்று போட்டிகளில் அதிர்ஷ்டவசமாகத்தான் இங்கிலாந்து இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. 'நாங்கள் சரியாக விளையாடவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறோம்' என்கிறார் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ஆஸ்லே கோல்.

முதல் சுற்றில் பராகுவேக்கு எதிரான போட்டியில் சேம்சைட் கோல் இங்கிலாந்துக்கு அதிர்ஷ்ட காற்றை திசைதிருப்பி விட்டது. சாதாரண அணியான டிரினிடாட்டுக்கு எதிராக மட்டும் இந்த அணி 2 கோல் அடித்து வெற்றி பெற்றது. சுவீடனுக்கு எதி



ரான போட்டியில் தலா இரண்டு கோல்களுடன் சமநிலை செய்தது.

இரண்டாவது சுற்றில் ஒரு கோல் அடித்துத்தான் இந்த அணி காலிறுதிக்கு வந்திருக்கிறது. அரையிறுதிக்கு அணியை அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு பெக்காம், ரூனே, ஆஸ்லே கோல் ஆகிய வீரர்களின் கையில்தான் இருக்கிறது.

வீரர் ஆஸ்லே கோல் ஈகுவடோருக்கு எதிரான போட்டி முடிந்த பின்னர் ரூனேயின் திறமையைப் பற்றி கூறிய போது, 'ரூனேயிடம் பந்துகளை பாஸ் செய்தால் அவர் மாஜிக் செய்துவிடுவார். அவரிடம் பந்து சென்றால் அது கோல் ஆவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்கான சூழ்நிலையையும் உருவாக்கிவிடுவார்' என்றார்.

### ஒழுக்கம் என்ன விலை?

இந்தத் தொடரை சேர்த்து இதுவரை நடந்த 17 உலக கோப்பை போட்டிகளில் போர்த்துக்கலைப் பொறுத்தவரை 4 முறைதான் தகுதி பெற்றிருக்கிறது. இந்த அணி இதுவரை ஒருமுறைகூட கோப்பை வென்றதில்லை.

1966இல் இங்கிலாந்து கோப்பை வென்றபோது இந்த அணி மூன்றாம் இடத்தைப் பிடித்தது. கலந்துகொண்ட மற்ற தொடர்களில் முதல் சுற்றிலேயே இந்த அணி வெளியேறிவிட்டது.

போர்த்துக்கல் அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்கள், இந்த அணியில் பெரிய எழுச்சி அலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முதல் சுற்றில் ஈரான், அங்கோலா மற்றும் மெக்சிகோவுக்கு மூன்று போட்டிகளிலும் இந்த அணி வெற்றி பெற்றது. நெதர் லாந்து அணிக்கு எதிரான போட்டி புலிக்கும் சிங்கத்துக்கும் இடையிலான போட்டிபோல் அமைந்துவிட்டது. ஒழுக்கம் என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு போட்டி வன்முறை களமாக மாறிவிட்டது.



இங்கிலாந்து ரசிகர்கள் ஸ்ரேடியத்திலும் அதற்கு வெளியிலும் வெறித்தனமாக நடந்துகொண்டாலும் கூட அந்நாட்டு வீரர்கள் அப்படியல்ல. களத்தில் நியாயமாக விளையாட நினைப்பவர்கள்.

ஆகவே எதிரும் புதிருமான இரு அணிகளின் போட்டி நிச்சயம் ரசிகர்களுக்கு விறுவிறுப்பை ஏற்படுத்தும்.

இன்னொரு வகையில் பார்த்தால் போர்த்துக்கல் அணி இங்கிலாந்துடன் மோதும் போட்டியில் நியாயமாக விளையாட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. காரணம் இந்த அணி வீரர்களும் மஞ்சள் அட்டை பெற்றுள்ளதால் இந்தப் போட்டியிலும் வெற்றி பெறும் பட்சத்தில் அரையிறுதியில் விளையாட முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

ஆகவே இங்கிலாந்து அணிக்கு இணையாக விளையாட வேண்டிய நிலைக்கு போர்த்துக்கல் தள்ளப்படும். என்றாலும் பந்துகளை கோல் ஆக்குவதற்கு வீரர்கள் காட்டும் ஆக்ரோஷம் சிங்கத்துடன் மோதும் உணர்ச்சியுடன் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# கோல்களைத் தடுத்தவர்கள்

இந்த உலகக் கோப்பையில் அதிக கோல்களை தடுத்த கீப்பர் என்ற பெருமை கானா வீரர் ரிச்சர்டு கிங்ஸ்டனுக்கு கிடைத்துள்ளது.

கானா அணி விளையாடிய 4 போட்டிகளில் அவர் 22 கோல்களை அபாரமாக தடுத்து முதலிடம் வகிக்கிறார்.

அங்கோலா கோல் கீப்பர் ஜோ ரிகார்டோ, ஜப்பானின் யோஷிகாட்சு கவாகுச்சி இருவரும் 3 போட்டிகளில் தலா 21 கோல்களை தடுத்து இரண்டாம் இடத்தில் உள்ளனர்.

கிங்ஸ்டன் (கானா) 6 கோல்களையும், கவாகுச்சி (ஜப்பான்) 7 கோல்களையும் கோட்டை விட்ட நிலையில், ரிக்கார்டோ (அங்கோலா) வெறும் 2 கோல் மட்டுமே விட்டுக் கொடுத்துள்ளார்.

காலிறுதிக்கு முன்னேறியுள்ள அணிகளில் இத்தாலியின் கியான்லுகி பபான், போர்த்துக்கல் கீப்பர் ரிகார்டோ இருவரும் தலா 16 கோல்களை தடுத்துள்ளனர்.

பிரேசில் அணியின் கீப்பர் டிடா 15 கோல்களை தடுத்துள்ளார். இவர்கள் மூவருமே இதுவரை விளையாடியுள்ள 4 போட்டிகளில் 1 கோல் மட்டுமே விட்டுக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அமிர்தன்**

## காலிறுதி ஆட்டங்கள்

### இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| | அணிகள் | இடம் | நேரம் (இரவு) |
|---|---|---|---|
| 3ஆவது ஆட்டம் | இங்கிலாந்து – போர்த்துக்கல் | ஜெல்சன்கிர்சன் | 8.30 |
| 4ஆவது ஆட்டம் | பிரேசில் – பிரான்ஸ் | பிராங்க்பர்ட் | 12.30 |

# ஆஸி. தோல்விக்கு காரணம் நடுவர்!

உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடரில் இம்முறை நடுவர்களின் செயல்பாடு மிகவும் மோசமாக இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இத்தாலிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் தோல்விக்கு நடுவர் லூயிஸ் மெடினா தான் காரணம் என பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

தற்போது நடந்துவரும் உலக கோப்பை உதைபந்தாட்ட தொடரில் எப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை வீரர்கள் அதிகமாக மஞ்சள் அட்டை, சிவப்பு அடடைகள் பெற்றனர் . இதற்கு வீரர்களின் முரட்டுத்தனமான ஆட்டம் மட்டுமல்ல நடுவர்களின் தவறான முடிவுகளும் காரணம் என்பது பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலி, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாம் சுற்றுப் போட்டிக்குப் பின் இப்பிரச்சினை பெருமளவில் வெடித்துள்ளது. கெய்சர்ஸ்லாடன் நகரில் நடந்த இப்போட்டியில் கடைசி நிமிடத்தில் நடுவர் லூயிஸ் மெடினா, பெனால்டி வாய்ப்பு தரவே இத்தாலி 1–0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இத்தாலியின் கிராசோ பந்தை பெனால்டி ஏரியாவுக்குள் கொண்டு சென்ற போது அவுஸ்திரேலியாவின் லூகாஸ் நீல் அவரை முரட்டுத்தனமாக தடுத்ததால் பெனால்டி வழங்கியதாக நடுவர் கூறியுள்ளார். ஆனால் வீடியோ மீள் அசைவில் நீல் பந்தை தடுப்பதற்காக தாவியிருக்கிறார். இவர் கிராசோவுடன் மோதக் கூட இல்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

இந்தத் தவறுக்கு மஞ்சள் அட்டை தர வேண்டும் என்பதே உதைபந்தாட்ட விதி. ஆனால் நடுவர் இத்தாலிக்கு பெனால்டி வாய்ப்பு கொடுத்ததால் அவுஸ்திரேலியாவின் தலைவிதியே மாறிவிட்டது.

இதற்கு அவுஸ்திரேலிய வீரர்கள் பெரிதும் வருத்தம் தெரிவித்துள்ளனர். போட்டி முடிந்ததும் வீடியோ மீள் ஒளிபரப்பில் பெனால்டி வழங்கியதற்கான காரணத்தை பார்த்தோம். இதில் நீல், கிராசோவுடன் மோதவில்லை என்பதை பார்த்ததும் நொந்துவிட்டோம். நடுவரின் தவறான முடிவால் நாங்கள் தோற்றது ஏமாற்றமளிக்கிறது என்றார் அவுஸ்திரேலியாவின் நட்சத்திர வீரர் காஹில். இது குறித்து உதைபந்தாட்டத்தின் தீவிர ரசிகரான அவுஸ்திரேலிய பிரதமர் ஜான் ஹோவர்ட் கூறுகையில், 'நடுவர் அளித்த தவறான பெனால்டி வாய்ப்பை பார்த்ததும் எனது இதயமே வெடித்து போன்று இருந்தது. முக்கியமான கட்டத்தில் நடுவரின் தவறால் எங்கள் அணி தோற்று விட்டது' என்றார்.

இதையெல்லாம் சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பும் ஆமோதிக்கிறது. பிபா தலைவர் பிளாட்டர் கூறுகையில்,


இம்முறை உலக கோப்பை தொடரில் எல்லா அணிகளும் சிறப்பாக விளையாடுகின்றன. ஆனால் நடுவர்கள் தான் சரியான முறையில் தேர்வு செய்யப்படவில்லை. கால்பந்துக்கு மிகவும் அவசியமானவர் நடுவரே.

ரசிகர்கள் சிறந்த ஆட்டத்தை ரசிக்க வேண்டுமெனில் சரியான நடுவரும் இருக்க வேண்டும் என்பது அவசியம். இந்த விஷயத்தில் பிபா கவனம் செலுத்தும் என்றார். இதனால் இனிவரும் போட்டிகளில் நடுவர்களும் கவனமுடன் செயல்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கர்ம்வீரர் காமராஜர்

## மீள்பார்வை 14

முருக-தனுஷ்கோடி



### 7. சத்தியமூர்த்தியுடன்...

காமராஜுக்குக் குடும்பப் பொறுப்பு கிடையாது. பிரமச்சாரியான அவருக்குச் சொத்துக்களை நிர்வகிக்கும் பொறுப்புக் கூட இல்லை. காந்திஜி போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மட்டும் காங்கிரஸில் ஈடுபடுபவர்களைப் போலல்லாமல் தேர்தல் நேரத்தில் மட்டும் காங்கிரஸ் வேலைகளில் ஈடுபட்டு மற்ற நேரங்களில் சும்மா இருப்பவர்களைப் போலல்லாமல் விலகி இருப்பதும் வருவதுமாக இருப்பவர்களைப் போலல்லாமல், முழு நேரத்தையும் காங்கிரஸ் தொண்டிலேயே காமராஜ் செலவிட்டார். இரவும் பகலும் காங்கிரஸ் என்ற சிந்தனையே அவருக்கு இருந்தது.

இதனால், மக்களின் மனப் போக்கை அறிந்து கொள்ளும் சாமர்த்தியத்தை அவர் பெற்றார். தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காங்கிரஸாரைப் பற்றிய அத்தனை விஷயங்களும் அவருக்குத் தெரியும். இந்த விஷயத்தில் காமராஜுக்கு நிகர் தமிழ் நாட்டில் அவரே தான். யார் எந்தப் பக்கம் சாய்வார்கள் என்பதைத் துல்லியமாகக் கவனிக்கும் பக்குவத்தை அவர் பெற்றுத் தேர்தல் புலியாய் விளங்கினார். இன்னார் வெற்றி பெறுவார் என்று அவர் கூறினால், அது அப்படியே நடக்கும்.

1934 ஆம் ஆண்டில் நாகராஜன் நட்புக் கிடைத்தது. காமராஜின் நாணயமும், தைரியமும், தேச பக்தியும் தன்னைக் கவர்ந்ததாகக் கூறிக் காமராஜுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களை நாகராஜன் சமாளித்தார். 15 ஆண்டுகள் அவர் காமராஜுடன் சேர்ந்திருந்தார். ராஜ்ய விவகாரங்களில் நாகராஜன் காமராஜருக்கு ஆலோசகராக இருந்தார். அதுபோலவே காலஞ்சென்ற தூத்துக்குடி கந்தசாமி பிள்ளை, விருதுநகர் முத்துசாமி, சாத்தூர் லட்சுமணப் பிள்ளை, மதுரை சிதம்பர பாரதி, நித்தியானந்தம், வெங்கடாத்திரி நாயுடு, திருச்சி, அருணாசலம், சங்கிலி யாபிள்ளை, சீர்காழி சாமிநாதன் செட்டியார், சேலம் தீர்த்தகிரி முதலியார், பண்ருட்டி தேவ நாகய்யா, கடலூர் சுதர்சனம், முத்து முதலியார், சிதம்பரம் நயினியப்பன், வடஆற்காடு உபயதுல்லா, வேலூர் குப்புசாமி முதலியார், திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை, சென்னை ஆதிகேசவலு நாயகர், லட்சுமணசாமி முதலியார், எஸ்.வெங்கட்ராமன் போன்ற தேசியவாதிகள் காமராஜுக்கு ஒத்துழையாமை காலத்தில் இருந்தே உதவியாயிருந்து ஒத்துழைத்தார்கள்.

சத்தியமூர்த்திக்கும் காமராஜுக்கும் ஏற்பட்டிருந்த நல்லுறவு சத்தியமூர்த்தி மறையும்வரை அப்படியே இருந்தது. சத்தியமூர்த்தி கள்ளங் கபடில்லாதவர். சூழ்ச்சி என்பது அவரிடம் எப்போதுமே கிடையாது; தெரியவும் தெரியாது. இதனால் சத்தியமூர்த்திக்கு அரணாய் விளங்கும் பொறுப்பு காமராஜுக்கு இருந்துகொண்டேயிருந்தது. காமராஜைக் கலக்காமல் சத்தியமூர்த்தி எதுவும் செய்வதில்லை.

1940இல் தனிப்பட்டவர்கள் சட்டமறுப்பு இயக்கம் நடந்தது அல்லவா? அதற்கு முன்னால் சென்னை சர்வகலாசாலையின் துணைவேந்தர் பதவியைச் சத்தியமூர்த்திக்கு கொடுக்கிறோம் என்று வெள்ளையர் அரசு கூறியது. பிரபல காங்கிரஸ் தலைவர் ஒருவர் இது விஷயத்தில் சத்தியமூர்த்திக்கு யோசனை கூறினார். அது என்ன தெரியுமா? துணைவேந்தர் பதவியைத் தாராளமாக ஒப்புக் கொள்ளுங்கள் என்பதுதான்.

காமராஜிடம் இதுகுறித்த ஆலோசனை கலந்தார். "தனிப்பட்டவர்கள் சட்டமறுப்பு வரப்போகிறது .அதில் கலந்து கொள்ளாமல் துணைவேந்தர் பதவியை ஏற்றால் உங்கள் அரசியல் வாழ்க்கை என்னாவது? கண்டிப்பாய் அந்தப் பதவியை நீங்கள் ஒப்புக் கொள்ளக் கூடாது" என்று காமராஜ் அழுத்தமாகச் சொன்னார். காமராஜ் யோசனைப் படி சத்தியமூர்த்தி நடந்தார். இதுபோல பல சந்தர்ப்பங்களில் நடந்துள்ளன. சூழ்ச்சி வலைகளில் விழாமல் சத்தியமூர்த்தியைக் காமராஜ் தப்பிக்கச் செய்திருக்கிறார். சத்தியமூர்த்திக்குப் பக்கபலமாகக் காமராஜ் விளங்கினார். நம்பிக்கை உள்ள ஒரே தோழர் காமராஜ் என்று சத்தியமூர்த்தியும் எண்ணினார்.

விவாதத்தில் எதிரியை மடக்குவதில் சத்தியமூர்த்தி வல்லவர். காங்கிரஸ் தோழர்கள் இரவு நேரங்களில் தாக்கப்பட்டபோது, வெல்லிங்டன் அரசைப் பார்த்து சத்தியமூர்த்தி காட்டமாகக் கேட்டார். "பகலிலோ காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. இரவிலோ குண்டர்கள் ஆட்சி நடக்கிறது. அப்படியானால் வெல்லிங்டனே உமது சூழ்ச்சி எங்கே நடக்கிறது" என்று கேட்டார் சத்தியமூர்த்தி. சைமன் கமிஷன் பகிஷ்கார நேரத்தில் கவர்னராய் இருந்த லார்டு வெல்லிங்டனைப் பார்த்து அவர் கேட்ட கேள்வியே இது. பேசுவதில் இவ்வளவு வல்லமை-சாமர்த்தியம் இருந்தாலும், கட்சி யந்திரத்தின் நெளிவு சுளிவுகள் அவருக்குத் தெரியாது. இது விஷயத்தில் சத்தியமூர்த்திக்கு உறுதுணையாக இருந்து தேர்தல்களில், சத்தியமூர்த்தி வெற்றி பெறுவதற்கான வேலைகள் அனைத்தையும் காமராஜே பொறுப்பேற்று எதிரிகளைத் திறணடித்தார்.

மேலிடங்களில் மட்டுமே தொடர்பு அதிகம் கொண்டிருந்த சத்தியமூர்த்திக்குத் தொண்டர்கள் மத்தியிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தார் காமராஜ். காமராஜுக்கு அரசியலில் மேலிடத் தொடர்புகள், அந்தஸ்து, கட்டுக்கோப்பு ஆகியவைகளைச் சத்தியமூர்த்தி உருவாக்கிக் கொடுத்தார். இவ்வாறு சத்தியமூர்த்தியும், காமராஜும் ஒருவருக்கொருவர் அரசியல் வாழ்க்கையில் உதவியாக இருந்தனர்.


சத்தியமூர்த்தியின் அன்புக்கு இரண்டு பேர் பாத்திரமாக இருந்தார்கள். ஒருவர் அவருடைய புதல்வி; இன்னொருவர் காமராஜ் அளவிட முடியா அன்பு என்பார்களே அ:தைச் சத்தியமூர்த்தியிடமே காமராஜ் காட்டினார். சென்னை ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடந்தபோது, "சத்தியமூர்த்தி நகர்" என்று அதற்குப் பெயர் வைத்தார் காமராஜ். தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆகிப் பதவியேற்றதும், நேராகச் சத்திய மூர்த்தி வீட்டுக்குப் போய், சத்தியமூர்த்தி படத்தை வணங்கி அவர் துணைவியாரிடம் ஆசி பெற்றார். இவையெல்லாம் நட்புக்கு இலக்கணம்.

*பெற்ற மனம் பித்து- பிள்ளை மனம் கல்லு*


ரா. கிருஷ்ணசாமி நாயுடுவைப் பற்றிக் காங்கிரஸ் ஊழியர்கள் அனைவரும் அறிவார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராய் இருந்து, தலைவரின் கட்டளையை நிறைவேற்றியவர் அவர். 33 ஆண்டுகளுக்கு முன் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை இங்கு நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

1942 ஆம் ஆண்டு ஒருநாள் மாலை. அவர் மதறாஸ்-திருவனந்தபுரம் "பாஸ்ட்-பாசஞ்சர்" வண்டியில் ஸ்ரீவில்லிப்புத்தூருக்குச் சென்று கொண்டிருந்தார். அன்று மாதாந்தரக் கிருத்திகை நாள். திருப்பரங்குன்றம் ரெயில்வே ஸ்டேஷனில் வண்டி நின்றது. சாமி தரிசனத்துக்காக வந்த மக்கள் கூட்டம் ஒருவர் மீதொருவர் முண்டியடித்துக் கொண்டு பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் அலைந்தது. வண்டிக்குள் இருக்கும் பிரயாணிகளுக்கும் வண்டி ஏற வருபவர்களுக்குமிடையே வாய் கைச் சண்டைக்குள் ஒருவாறாக முடிந்த பின் வண்டி புறப்பட்டது.


(தொடரும்)











வல்வெட்டித்துறை, கம்பர்மலை கொம்மந்தறை வித்தியாலய இலண்டன் பழைய மாணவர்சங்கம் கடந்த ஆண்டு நடத்திய பூபாளராகம்-2005 நிகழ்வை முன்னிட்டு உலகலாவிய ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற 13 சிறுகதைகள் உள்ளடங்கிய பூபாளராகங்கள் சிறுகதைத் தொகுதி-2005 வெளியீடு கடந்த 25 ஆம் திகதி இலண்டன் சிவன் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதன் நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

படஉதவி:- *ம.சுதாகரன் (நிகழ்ச்சி அமைப்பாளர்)*

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்தில் முறைசாராக் கல்வி, முன்பள்ளி, உடற் கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கடமை பார்க்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

இதற்கமைய குறிப்பிட்ட பாடத்துறையில் அல்லது அப் பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறையை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றுள்ள அல்லது குறிப்பிட்ட பாடத்துறையில் பயிற்சி பெற்று ஆசிரியராக 10 வருட ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்துள்ள இ.ஆ.சே.வகுப்பு 1, வகுப்பு 2.1 ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை 14.07.2006 ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலய அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வேறு வலயத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் தமது விண்ணப்பப்படிவங்களை தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளருடாக சமர்ப்பிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(க-7)

## பால்மா விளம்பரங்களுக்குத் தடை

(கொழும்பு)

இலங்கையில் பால்மா விளம்பரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா நேற்று முன்தினம் கூறுகையில்,

பால்மா விளம்பரங்களுக்கு பல நாடுகள் அனுமதி அளிப்பதில்லை. உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் வகையில் பால்மா விளம்பரங்களைத் தடை செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்றார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து 125 மில்லியன் டொலர் அளவிலான பால்மா கடந்த ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(கு)

# பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

தனபாலசிங்கம் தர்மபாலன் பெண்
லீலாவதி,
விநாயகர் வீதி நல்லூர் வடக்கு,
நல்லூர்.

வழக்கு இல: மணநீக்கம் /667

- வழக்காளி

எதிர்

தனபாலசிங்கம் தர்மபாலன்
'வெள்ளாம் போக்கட்டி'
கொடிகாமம்.

- எதிராளி..

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழ்க்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் சமூகமாக இருக்கவும், இவ் வழக்கில் எதிராளிக்கு வலம்புரி தினசரி பத்திரிகை விளம்பரப்படுத்தல் மூலம் அழைப்புக்கட்டளை பதிற்சேவகம் செய்து திரும்பல் திகதியாகிய இன்று எதிராளி மன்றுக்கு சமூக மின்மையால் ஒரு முக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், வழக்காளி இன்று மன்றுக்கு அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து, வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு வழக்காளிக்கும், எதிராளிக்கும் இடையே 30.08.2004இல் நடைபெற்ற பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்து வருகிறார் என்ற காரணத்துக்காக இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாகும் எனக் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

எதிராளி வழக்காளியிடமிருந்து சீதனப்பணமாகப் பெற்ற ரூபா ஆறு (6) இலட்சத்தையும் வழக்காளிக்கு, எதிராளி மீளச் செலுத்த வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையளிக்கப்படுகிறது.

எதிராளி நிரந்தரப்பிரிவினைப்பணமாக ரூ.10.00.000/- ரூபா பத்து இலட்சத்தையும் வழக்காளிக்கு வழங்கவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித்தீர்வை வழங்கப்படுகிறது.

இவ்வாறான முற்றான விவாகரத்துத் தீர்வையின்பின் வழக்காளி தன் கன்னிப்பெயரான சின்னத்தம்பி மகள் லீலாவதி என்ற பெயரைப் பாவிக்கலாம் என்றும் திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கலாம் என்றும் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

மேலும் வழக்காளி பதிவாளருக்குச் செலவுப்பட்டியலைச் சமர்ப்பித்தால் அதனைப் பதிவாளர் வரியீடு செய்துவரும் தொகையை எதிராளி வழக்காளிக்குச் செலுத்தவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது. இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி 'வலம்புரி' தினசரிப் பத்திகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதிற்சேவகம் செய்யப்பட்டு மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை எதுவும் அணைக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றாக தீர்வையாக்கப்படும்.

*மாவட்ட நீதிபதி*
*இ.த.விக்னராஜா*

*வரைபு*
*வழக்காளியின் சட்டத்தரணி.*
*பவானி சற்குணராசா.*

நீதிமன்றக் கட்டளைப்படி,
ச.வன்னியசிங்கம்
பதில் பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(464)

# மீன்பிடி வலை தயாரிப்பதற்கான தொழிற்பேட்டை

அவுஸ்திரேலிய பிரான்சு கரித்தாஸ் கூட்டு நிதியத்தினால் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு குருநகரில் 'திட்டமிட்ட தொழில் பேட்டை யாழ்.மீன்பிடி வலை உருவாக்கம்' திறந்துவைக்கப்பட்டது. யாழ்.கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் வணபிதா ஜோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அவுஸ்திரேலியாவின் கரிதாஸ் நிறுவன இயக்குநர் யக்.டி.குறூட், யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம், வணபிதா சவுந்தரநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மீன்பிடி வலைக்ள் பெறுவதில் ஏற்படும் சிக்கல்களை யாழ்.குடாநாட்டில் நிறைவுசெய்யும் நோக்கில் இத் தொழில் கூடத்தை நிறுவியுள்ளதாகவும், மீன்வளம் குறைந்து வருவதனால் மீன் உற்பத்தி ஆய்வு நிறுவனம் ஒன்றை இதற்கருகில் மிக விரைவில் நிறுவவுள்ளதாகவும்,

கடலில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் பாசியிலிருந்து மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மருத்துவ தொழிற்சாலையை மண்டை தீவில் நிறுவவுள்ளதாகவும் இந்நிகழ்வில் உரையாற்றிய கரிதாஸ்-கியூடெக் முகாமையாளர் ஜெயசேகரம் தெரிவித்தார். (து-133)

# "இலக்கணப் பூங்கா" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அராலியூர் எஸ்.நிகேஸ் ஆக்கத்தில் உருவாகிய 'இலக் கணப் பூங்கா' என்னும் நூல் வெளி யீடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு அராலி தெற்கு மாவத்தை வீதியில் அமைந் துள்ள சங்கலன் கல்விச் சோலையில் யோ.கஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டு மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவஞான போத னும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுயாதீன மனித உரிமைகள் பணிப்பாளர் எஸ்.மோகன், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் மா.சோமசேகரம், அ.மி.த.க.பாடசாலை அதிபர் திருமதி காயத்திரி நகுலராஜா, சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி தர்மராஜா, சங்கானை பிரதேசசபை பொறுப்பதிகாரி மா.ஜெகராஜா அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலய ஆசிரியர் தி.தில்லைச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்நது வரவேற்புரையை எஸ்.கோபி றமணாவும், ஆசியுரையை ஓய்வு பெற்ற தொழில் நுட் பக்கல்லூரி அதிபர் எஷ்.செந்தில் நாதனும் வழங்கவுள்ளனர். நூலின் முதற்பிரதியை அராலியூர் சிற்பக்கலை வாருதி நாக முத்து கோபாலரத்தினம் பெறவுள்ளார். நூலின் ஆய்வுரையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தமிழ்த் துறை ஆசிரியர் ந.குகபரன் நிகழ்த் தவுள்ளார். (க-49,9)

# இளம் பெண்களுக்கு சுயதொழில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு இடம்பெயர்ந் தோர் நல்ன்புரி நிலையங் களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இளம் பெண்களுக்கான சுயதொழில் திட்டமொன்று கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அரிசிமா தயாரித்தல், மிளகாய்த்தூள் அரைத்தல் போன்ற வேலை களில் ஈடுபட்டு பொதிசெய்து அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)












குருநகரில் 'திட்டமிட்ட தொழில் பேட்டை யாழ்.மீன் பிடிவலை உருவாக்கம்' திறப்பு விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும், பெயர் பலகையை யாழ். மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் திறந்து வைத்து நிறுவனத்தின் அடிக்கல்லை நாட்டுவதையும், நிறுவனத்தின் ஞாபகார்த்தக் கல்லை அவுஸ்திரேலிய கரித்தாஸ் நிறுவன இயக்குநர் யக். டி குறூட் திரை நீக்கம் செய்துவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று ஆறாம் திருவிழா

## சரணம் அரண் நமக்கே!

நாயகி, நான் முகி, நாராயணி
கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி
சாமனை, சாதி நச்சு
வாயகி, மாலினி, வராகி
சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள் சரணம்
அரண் நமக்கே!

*அபிராமி அந்தாதி*

## நாகம்மைத் தாயே நாளும் எமைக் காப்பாய்

கடலலைகள் வந்துனது காலடியில் மோதும்
கண்ணான தெய்வமென்று பக்தர்குழாம் சூழும்
விடம்நீக்கி வினைபோக்கி வாழவைக்கும் தாயே
வேறு தெய்வம் நீயல்லால் எமக்கேது பாரேன்
உடன்வந்து உனதடியைத் தொழுதிடவே எமக்கு
உற்றதுணை உன்னருளே தந்திடுவாய் நீயே
நடனமிடும் நாயகியே நாகம்மைத் தாயே
நாளுமெம்மைக் காத்திடவே நல்கிடுவாய் வரமே!

*கவிஞர் வ.யோகானந்தசிவம்*

## உலகத்தைக் காக்கின்ற ஓங்காரி நீயே!

மையலுடன் உனைத் தொழவே
மகிமை பல தருவா யம்மா!
வையகத்தில் வாழும் உரிமைதனை
வாஞ்சையுடன் அருள்வாயம்மா!
ஐயனுடன் உறைகின்ற தாயே
அவனியிலே சமாதானம் மலரவேண்டும்
ஒய்யார மணிபல்லவத்தில் வீற்றிருந்து
உலகத்தை காக்கின்ற ஓங்காரி (நீயே)

*ஸ்ரீதரன் நீக்கவி*

## வருந்துயர் மாற்றுமணி பல்லவத்தே

மருந்தவள் வானவர் மண்ணவர்க்கும்
திருந்திய நயினைநாக பூசணியவள்
பொருந்திய பூரணைத் தீர்த்தமதில்
வருந்துயர் மாற்றுமணி பல்லவத்தே

*சிவ.சண்முகவடிவேல்*

## கருணை செய்ய வேண்டுமம்மா நாகத்தாள்

அரவணிந்த அம்பிகையே நாகத்தாள்
அலைகடலின் நடுவமர்ந்த நாகத்தாள்
சிலை வடிவில் எழுந்தவளே நாகத்தாள்
சிறப்பெல்லாம் அருள்பவளே நாகத்தாள்
புரமெரித்தோன் பாகத்தாள் நாகத்தாள்
புதுமைகளை செய்பவளே நாகத்தாள்
கரம்கூப்பி வணங்குகிறோம் நாகத்தாள்
கருணை செய்ய வேண்டுமம்மா நாகத்தாள்

*தன - துரியாத்ரன்*

## நயினை உறை நாயகியே

நயினை நகர் நாக ஈஸ்வரியே
நாடி வருபவர்க்கு நல்லருள் புரியும் நாயகியே
நல்ல பாம்பு குடை பிடிக்கும் நாயகியே
நாட்டில் நலம் சிறக்க
நல்ல அருள் புரிந்திடுவாய், நாயகியே!

*நயினை ராகினி தேவராஜா*

> காரண காரியங்கள் அறிந்த புத்திமான் உலகத்துடன் ஒத்துப் போகின்றான். அதை அறியாதவன் தன் வழியில் திருப்ப முயல்கின்றான். தெரியாதவனைக் கொண்டுதான் உலகத்தின் முன்னேற்றம் இருக்கின்றது.
> -பெர்னார்ட்ஷா

வலம்புரி

# புலிகளை தடைசெய்து விட்டு கண்காணிப்பது எப்படி?

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ததன் விளைவாக இலங்கையின் சமாதான முயற்சியில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை தடைசெய்யும் முடிபை மாற்றுமாறு உலகத் தமிழர்கள் உட்பட பலரும் கோரிக்கை விட்டிருந்தனர்.

எனினும் அந்தக் கோரிக்கைகளை எல்லாம் தூக்கியெறிந்து விட்டு அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடைசெய்துவிட்டது.

சமாதான முயற்சியில் நோர்வே ஈடுபட்டுவரும் இவ்வேளையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிபு தூரநோக்கற்றதும் சுயலாபம் கருதியதும் என்பதில் இருவேறு கருத்துக்கிடமிருக்க முடியாது.

அதிலும் ஐரோப்பிய ஒன்றியம் விட்ட மிகப் பெரும் தவறு என்னவெனில்;

இலங்கை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அங்கம் பெற்றிருக்கும்போது - அந்நாடுகள் இம்முடிபை எடுத்தமையாகும்.

விடுதலைப்புலிகளை தடைசெய்வதற்கு முன்னதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் விடுதலைப்புலிகளை தடை செய்வதால் ஏற்படக் கூடிய சாதக பாதக விளைவுகளை கேட்டறிந்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து விடுதலைப்புலிகளை தடை செய் என்ற அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிபு இப்போது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

அதாவது விடுதலைப்புலிகளை தடை செய்த பின்னர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இடம்பெறுவதென்பது பொருத்தமானதல்ல.

இதனையே விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர். உண்மையில் விடுதலைப்புலிகளைத் தடை செய்த மறுகணமே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் பெற்றுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அந்தப் பணியிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளைத் தடைசெய்த நாடுகளின் பிரதிநிதிகள் தமது யுத்தநிறுத்த கண்காணிப்புப் பணியில் நடுநிலை வகிப்பார்கள் எனக் கருத முடியாது.

எனவே அவர்கள் விலகிக் கொள்வதே சாலப் பொருத்துடையதாகும். இந்நிலையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அங்கம் பெற முடியாது என்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பு நியாயமானதாகும்.

இது விடயத்தில் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என நோர்வே கேட்பது பொருத்தமானதாக தெரியவில்லை.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அங்கம்பெற வேண்டுமென நோர்வே கருதுமாயின் அதற்கு இருக்கக் கூடிய ஒரேஒரு வழி,

விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கேட்பதாகும்.

# இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்து வருகின்றது!

## கவலை தெரிவிக்கிறது உலக வங்கி

(கொழும்பு)

இலங்கை நிலைமைகள் குறித்து உலகவங்கி கவலை தெரிவித்துள்ளது. கொழும்பு ஊடகவியலாளர்களிடம் உலக வங்கியின் புதிய வதிவிடப் பிரதிநிதி நயோகோ இஸ்கி நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலைமைகளை நாம் அவதானித்து வருகிறோம். இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சீர்குலைந்து வருகிறது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கின் அபிவிருத்திப் பணிகளில் எதிர் விளைவுகளை தற்போதைய சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் போர்ச் சூழல் உள்ளபோதும் சர்வதேச கடனுதவி வழங்கும் அமைப்புகள் தொடர்ந்து அபிவிருத்திக்கான உதவிகளை வழங்கி வருகின்றன. தற்போதைய நிலைமையை சீர்ப்படுத்த முயற்சிக்கிறோம் என்றார்.

வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கூறுகையில், இலங்கையின் சுற்றுலா மற்றும் முதலீட்டில் சரிவு ஏற்பட்டுள்ள போதும் பொருளாதாரத்தை அது பாதிக்காது. நிலைமை சீராகும் என்ற நம்பிக்கை உள்ளது.

வன்முறைகள் தொடரும் நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதியில் அபிவிருத்திப் பணிகள் முடங்கும். இவற்றைக் கருத்தில்கொண்டு தமது எதிர்காலத்தை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

இங்கே அமைதியும் அபிவிருத்தியும் தேவை. அபிவிருத்திக்கு அமைதி தேவை. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தவும் வீடுகளை மீளக்கட்டியெழுப்பவும் பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்ந்து இயங்கவுமான செயற்பாடுகளை அரச நிறுவனங்கள் ஊடாக மேற்கொண்டோம்.

மேல் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி வடக்கு- கிழக்கில் ஏற்படவில்லை. கடந்த 4 ஆண்டுகளில் இந்த நாட்டில் ஏழைக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளியும் அதிகரித்துள்ளது. உலக வங்கியை விமர்சனம் செய்கின்ற தரப்பினருடன் நாம் விவாதிக்க தயாராகவுள்ளோம். ஆனால் கடந்த காலங்களில் அப்படியான விவாதங்கள் நடைபெறவில்லை என்றார். (கு)

# தட்டுத்தடுமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் "நோர்வே"

(கொழும்பு)

இராணுவத்தின் உயர்மட்டத் தளபதி ஒருவரின் படுகொலை முழு அளவிலான யுத்தமொன்றிற்கான சூழலை வலியுறுத்தி நிற்கும் ஒரு நிலையில் ஐந்து ஸ்கன்டிநேவிய நாடுகள் இலங்கையில் தடுமாறிக்கொண்டு நிற்கும் யுத்த நிறுத்தத்தை காப்பாற்றும் பிரயத்தனத்தில் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் கூடின. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகியவற்றின் கண் காணிப்பாளர்கள் நடுநிலையாக பணிபுரிய மாட்டார்கள் என்பதால் அவர்கள் வெளியேற வேண்டும் என்ற விடுத லைப் புலிகளின் கோரிக்கை பற்றி ஆராய்வதற்காகவே அந்தக் கூட்டம் ஏற்படாகியிருந்தது.

கடந்த வியாழனன்று நடைபெற்ற கூட்டத்தில் சுவீடன் தனது பாகத்தை மதிப்பீடு செய்வதற்கு மேலும் கால அவகாசத்தை கோரியிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கண்காணிப்புக் குழுவின் இப்போதைய தலைவர் சுவீடன் நாட்டவராவர். நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் கூறுகையில், ''நோர் வே நாட்டினரை அதிகமாக நியமிக்கும் சூழல் இல்லை'' என்றார். இன்னுமொரு ஸ்கன்டிநேவிய நாடான ஐஸ்லாந்தின் உத்தியோக பூர்வமான கருத்துக்கள் இதுவரை முன்வைக்கப்படாத நிலையே இருக்கிறது.

கடந்த மாதம் கடற்படைப் படகொன்று மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து கடற்கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பு நிச்சயமற்றதொன்றாக மாறிய நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடற் கண்காணிப்பிலிருந்து விலகியுள்ளனர். கடந்த புதன்கிழமையன்று இலங்கையின் வடமேற்கு கடற்கரையான கற்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற கடற் சண்டையில் ஐந்து கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பரின் பின்னர் 820 பேர்கள் வடக்கு -கிழக்கில் பலியாகிய நிலையில் 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தம் வெறும் கடதாசியாகியுள்ளது. நோர்வேயின் பாகமும் கேள்விக்குறியாகியுள்ளது. வன்முறைகளிலிருந்து குடிமக்களை பாதுகாக்குமாறு சர்வதேச மன்னிப்பு சபை இலங்கையிடம் கேட்டிருக்கிறது. பொதுமக்களுக்கெதிரான வன்முறைகள் நியாயத்தின் முன் நிறுத்தப்படாத நிலை அச்சத்தையும் திகிலையும் தோற்றுவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற ஒவ்வொரு தாக்குதலினதும் விளைவாக மக்கள் வீடுகள், கிராமங்களிலிருந்து வெளியேறி புகலிடம் தேடி அலைகின்றனர். ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்களின் படி கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து வடக்கு -கிழக்கின் 39,883 பேர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளதால் பேச்சுவார்த்தை மேசைக்கு இருதரப்பினரையும் கொண்டு வருவதற்கு நோர்வே அனுசரணையாளரால் முடியாத நிலை உள்ளது. எவ்வாறாயினும், "எமது பொறுமை எல்லையற்றது. ஆனால் பொறுமையிழந்து நிற்பவர்கள் மக்கள் தான்'' என்று எரிக்சொல்ஹெய்ம் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இன்றைய நெருக்கடி நேரத்தில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களை விலக்குவது கண்காணிப்புக் குழுவை பலவீனமடையச் செய்யும் என்பதே அவரது நிலைப்பாடு.

கண்காணிப்புப் பணியிலிருந்து ஒரேயடியாக வெளியேறுவதை விடுத்து விடுதலைப்புலிகளுடன் ஏதேனுமொரு சமரசத்திற்கு செல்லும் முயற்சிகளிலேயே நோர்வே நம்பிக்கை கொண்டிருக்கிறது என்று ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். சமாதானத்தை ஏற்படுத்துவதில் நோர்வே நாட்டிற்கு இருக்கும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தவேண்டும் என்று விரும்பும் சர்வதேசம் நோர்வே வெளியேறுவதை விரும்பப் போவதுமில்லை என்றும் அவர் தெரிவித்தார். நோர்வே வெளியேறினால் யுத்தம் வெடிக்கலாம் என்றே புலிகளும் தெரிவித்திருக்கின்றனர். (து-6)

# மஹோற்சவம்

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்தமஹோற் சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது. 10ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் 11ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-79)

# கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயநவ குண்ட பக்ஷ புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற வுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 10மணி தொடக்கம் புதன் கிழமை மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்துதலுடன் வியாழக்கிழமை 10மணிக்கு மகா கும்பாபிஷேகம் தீபாராதனை நடை பெற்று பின் மாலை 6மணிக்கு திரு ஊஞ்சல் திருவீதியுலாவும் இடம் பெறவுள்ளது. (த-7)

# கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் நடைபெறவிருந்த யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்க ளுடனான கலந்துரையாடல் தவிர் க்க முடியாத காரணத்தினால் பிற் போடப்பட்டுள்ளதாக நீதிவான் நீதி மன்ற பதிவாளர் க.மீரா அறிவித் துள்ளார். பிற்போடப்பட்ட கலந்துரையாடலுக்கான திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (கு)

# உங்கள் மனதில் என்ன இருக்கிறது? கண்டுபிடிக்க கொம்பியூட்டர் தயார்!!

(லண்டன்)


கணனி முன் அமர்ந்திருப்பவரின் மனநிலையை கண்டறியும் புதுவகையான நவீன கணனியை இங்கிலாந்து மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள் இணைந்து வடிவமைத்துள்ளனர். ராயல் சொசைட்டி மற்றும் பிரிட்டிஷ் அகாடமி விஞ்ஞானிகள் இணைந்து நடத்தும் அறிவியல் கண்காட்சி லண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இக் கண்காட்சியில் கொம்பியூட்டரின் முன் அமர்ந்திருப்பவரின் மனநிலையைக் கண்டறியும் புதுவகையான தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன கொம்பியூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கணனியின் செயல்பாடு குறித்து லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலை பேராசிரியர் பீட்டர் றொபின்சன் கூறுகையில், இக் கணனியில் பொருத்தப்பட்டுள்ள வீடியோ கமரா மூலம் கணனியை இயக்குபவரின் தலை அசைவுகள் மற்றும் முகபாவங்கள் அறியப்பட்டு, அதன்மூலம் அவரின் மனநிலை கண்காணிக்கப்படும்.

வாகனம் ஓட்டுபவர்களின் திறமையை அதிகப்படுத்தவும், விளம்பர நிறுவனங்கள், மக்களின் மனநிலையை அறிந்துகொண்டு அதற்கேற்ப விளம்பரங்களை வடிவமைக்கவும் இத்தகைய கொம்பியூட்டர்கள் உதவியாக இருக்கும்.

நடிகர்களின் முகபாவங்களைக் கொண்டு இத் தொழில் நுட்பம் ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டுள்ளது. எங்களது சொப்ட்வேர் தொழில்நுட்பம் இணைக்கப்பட்ட கொம்பியூட்டரில் பொருத்தப்பட்ட வெப் கமரா மூலம் ஒருவரது மனநிலையை அறிந்து அதை வெப்சைட்டிற்கு அனுப்பமுடியும். இணையவழி கல்விக்கும் இத் தொழில்நுட்பம் உதவியாய் இருக் கும். எதிர்காலத்தில் மொபைல் போனிலும் இத் தொழில் நுட்பத்தை புகுத்துவதன் மூலம் மனநிலையை கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (கு)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஞானத் தெளிவு ஏற்பட்டதும் ஒருவர் உண்மையில் நான் என்பது இந்த உடல் அல்ல; அதிலிருந்து விலகிய பூரண தெய்வீகம் வாய்ந்த ஆத்மா என்பதைத் தெரிந்து கொள்கிறார்.

சுவாமி விவேகானந்தர்

# காணாமல் போனவர் காங்கேசன்துறையில்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போயிருந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவால் தெரிய வந்துள்ளது.

கடைக்குச் சென்ற கணபதிப்பிள்ளை நிசாந்தன் (வயது–17) என்பவரை காணவில்லைஎன அவர்து தாயார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது குறித்து பொலிஸாருடன் தொடர்பு கொண்ட போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கணேசமூர்த்தி ஜெயரூபன் (வயது–23) என்பவருடன் கணபதிப்பிள்ளை நிசாந்தனும் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளதாக யாழ்.மனிதஉரிமைகள்ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (து–133)

# துப்பாக்கிச் சூட்டில் 11மாடுகள் மரணம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை 11 மாடுகள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன.

அதிகாலை வேளை பொலிகண்டி இராணுவக் காவலரணுக்கு அருகிலுள்ள வேலியினூடாக மாடுகள் சென்ற வேளை சரசரப்புச் சத்தத்தைக் கேட்ட இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதில் 11 மாடுகள் கொல்லப்பட்டுள்ளன. இவை பல லட்சம்பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# தாதியர் பற்றாக்குறையை நீக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாக ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவைகளை திருப்திகரமாகக் கொண்டு செல்வதற்குத் தாதியர் பற்றாக்குறை மிகப் பெரும் சவாலாகவுள்ளதாக சுகாதார திணைக்கள உயர்அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து சுகாதார அமைச்சருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து மாவட்டத்திலுள்ள தாதியர் சேவையிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோர் மேற்படி தாதியர் சேவைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் இது தொடர்பான மேலதிக விபரங்கள் அல்லது ஆலோசனைகள் பெறவிரும்பின் அமைச்சரின் அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ச–5)



பிரான்ஸில் நடைபெற்றுவரும் கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்தின் ||ஆவது நாளான நேற்று பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தின் மாணவர்களும் பெற்றோர்களும் போராட்டத்தில் ஈடுபட்ட போது...

# கைக்குண்டுத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலியில் நேற்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் காயமடைந்தனர்.

நீர்வேலியில் சுற்று நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர்மீது நேற்றுக் காலை 8 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் காயமடைந்த இராணுவத்தினர் இருவரும் பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச–15)

# கடற்படைமீது தாக்குதல்

மன்னார் நகரப் பள்ளிவாசல் அருகில் பொருட்கள் வாங்கிச் சென்ற கடற்படையினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதனையடுத்துக் கடற்படையினர் திருப்பிச் சுட்டதில் தாக்குதலை நடத்தியவர் கொல்லப்பட்டார். இருதரப்பிற்கும் இடையில் சில நிமிட நேரம் பரஸ்பரம் துப்பாக்கித் தாக்குதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (ச–5,9)

## பயங்கர...

டின் பாதுகாப்பிற்குத் தான் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தமிழர் புனர் வாழ்வுக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் பயங்கரவாத அமைப்பை ஆதரிக்கின்றன.

நாட்டின் பாதுகாப்பின் பெயரால் அரசாங்கம் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுதலைப்புலிகளுக்கு தற்போது தயா மாஸ்டரின் சேவை தேவைப்படாது– அவருக்குப் பதிலாக ரணில் மாஸ்டர் திஸ்ஸஅத்தநாயக்க ஆகியோர் செயற்படுகின்றனர்.

காமினி திஸநாயக்க, ரணசிங்க பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலி ஆகியோர் கொல்லப்பட்ட நிலையிலும் விடுதலைப் புலிகளைரணில்விக்கிரமசிங்கஆதரிக்கின்றார்.

பரமி குலதுங்க கொலை தொடர்பான அறிக்கையில் கூட பயங்கரவாதிகள் பற்றி தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புலிகளைக் குற்றஞ்சாட்டவில்லை என்றார். (கு)

# பெனால்டி ஷூட் அவுட் மூலம் ஆர்ஜென்டீனாவை வென்று ஜேர்மனி அரையிறுதிக்கு முன்னேறியது

(பேர்லின்)

நொடிக்கு நொடி பரபரப்பை ஏற்படுத்திய முதலாவது காலிறுதியில் பெனால்டி ஷூட் அவுட் மூலம் ஜேர்மனி ஆர்ஜென்டீனாவை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுத்திக்குமுன்னேறியது.

ஜேர்மனியில்நடைபெற்றுவரும் 18ஆவது உலகக் கிண்ணத் தொடரில் பேர்லின் நகரில் நேற்று நடை பெற்ற முதலாவது காலிறுதியில் ஆர்ஜென்டினாவை எதிர்த்த ஜேர்மனி தனது சொந்த மண்ணில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

ஆட்டத்தின் முதல்பாதி இரு அணி வீரர்களும் தமது பகுதிக்குள்ளேயே விளையாடி வெறுப்பேற்றினார்கள்.

எனினும் இரண்டாவதுபாதி ஆரம்பமாகி நான்காவது நிமிடத்தில் (போட்டியின் 49வது நிமிடத்தில்) கோனர் வாய்ப்பைப் பெற்ற ஆர்ஜென்டீனா ஒரு கோலைப் போட்டு முன்னிலைவகித்தது.

அந்த அற்புதமான கோலை கோனரிலிருந்து ரிகில்ம் பந்தை அடிக்க அப்படியே உயர வந்த பந்தை கோல் போஸ்ட்டுக்கு அருகிலிருந்த அஜாலா மின்னல் வேகத்தில் தலையால் முட்டி வலைக்குள் தள்ள ஆர்ஜென்டீனா வீரர்கள் உற்சாகத்தில் துள்ளிக் குதித்தனர்.

இதன்மூலம் 1:0 என்ற கணக்கில் ஆர்ஜென்டீனா முன்னிலை வகித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 80ஆவது நிமிடத்தில் ஜேர்மனி அணித்தலைவர் மக்கல் பாலக் பந்தைக் கிராஸ் செய்ய அதனை டிம்பரோவ்ஸ்கி தலையால் குளோசிடம் பாஸ் செய்ய குளோஸ் அற்புதமான கோலாக மாற்ற ஆட்டம் சமநிலை பெற்றது.

இந்தக் கோல் ஆனது குளோசிற்கு இத் தொடரில் 5வது கோலாகும். இந்த நிலை நீடிக்க இரண்டாவது பாதி நேரமும் முடிபடைந்தது.

எனினும் மேலதிக நேரம் 30நிமிடங்கள் வழங்கப்பட்ட போதிலும் அதிலும் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததனால் போட்டியின் வெற்றியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட் அவுட் வழங்கப்பட்டது.

இதில் சிறப்பாக ஜேர்மனி கோல் கீப்பர் ஆர்ஜென்டீனா வீரர்களின் இரண்டு கோல்களைத் தடுக்கஜேர்மனி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (05)

## ஆயுததாரி...

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாக மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் மரண விசார ணைகளை மேற்கொண்டபின் பிரேத பரி சோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு வட் டுக்கோட்டைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பிரஸ்தாப நபர் சுடப்பட்ட இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் கடற்படைக் கண்காணிப்புக் காவலரண் ஒன்று இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் நடைபெற்ற இடத்தை கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. (து–49,15,133)

## கொள்ளையர்...

நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைளை மேற்கொண்டதுடன் மரண விசாரணைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக யாழ்.மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனுக்குநேற்றுஅதிகாலை 12.30மணிக்கு அறிவிக்கப்பட்டு அவரின் உத்தரவுக்கமைய இராணுவத்தினர் சம்பவ இடத்திற்குச் சென்ற போதும் திருடர்களைப்பிடிக்கமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (து–133,15)

## அரச சேவையில் புதிதாக...

முக்கு உத்தியோக பூர்வ மொழி அந்தஸ்து அளிக்கப்பட்டாலும் அது முழுமையாக அமுல்படுத்தப்படாததால் இரு முக்கிய சமூகங்களுக்குமிடையே பெரியள வில் கருத்து வேற்றுமை ஏற்பட்டதாக அவர் கூறினார்.

ஏற்கனவே பணியிலிருக்கும் அரச ஊழியர்களைக் கவர்ந்து இழுக்கக் கூடிய ஊதிய உயர்வு, ரொக்க சன்மானம் போன்றவற்றை வழங்க முடிபு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் தமிழை நன்றாகப் படிப்பதற்கு அனைத்து வசதிகளும் அதற்கான பயிற்சியும் அளிக்கப்படும். இனிப் புதிதாக அரச சேவைக்குச் சேர்பவர்களுக்கு இரண்டு மொழிகள் தெரிந்திருக்க வேண்டும்.

அதாவது தமிழர் ஒருவர் வேலைக்குச் சேர விரும்பினால் அவருக்குச் சிங்களம் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அதேபோல் சிங்களவர் ஒருவர் அரச சேவையில் சேர வேண்டுமானால் அவருக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும்.

இந்த மொழிக் கொள்கையை அமுல்படுத்தத் தேவையான வழிமுறைகள் குறித்தும் கட்டமைப்பு வசதிகள் குறித்தும் டி.ஈ. டபிள்யூ. குணசேகர, சரத் அமுனுகம, ஜானகா பண்டார தென்னக்கோன் ஆகியோர் கொண்ட அமைச்சரவைத் துணைக்குழு ஆலோசித்து வருகின்றது.

தற்போதைய நிலையில் 52.3 சதவீத தமிழ் மக்கள் சிங்களவர்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் மத்தியிலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர்.

அரசாங்க அதிபரின் ஆட்சி அதிகாரத்தில் உட்பட்ட குறைந்தது 29 பகுதிகளில் தமிழர்களுடைய மக்கள் தொகை 25 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையுள்ளது.

ஆனால் இந்த இடங்களில் இயங்கும் அரச அலுவலகங்கள் சிங்கள மொழியில் இயங்குகின்றன. இதனால் அங்கு தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

ஆனால் தற்போது அமுல்படுத்தப்படும் கொள்கை மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் என்று அமைச்சர் டி.ஈ.டபிள்யூ. குணசேகர தெரிவித்தார். (ச–5)

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க...

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்கள் முடிபுகள் எதுவும் இன்றி இடைநிறுத்தப்பட்டன. இந்நிலையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவற்றை நிறுத்துவதற்கு நோர்வேயாலோ அல்லது கண்காணிப்புக் குழுவாலோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளமுடியவில்லை.

இந்நிலையில் தானே முன்னின்று தனது தனிப்பட்ட முயற்சியால் சமாதானத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைவரம் படுமோசமாகச் செல்கின்றது. எப்போது பாரிய போர் வெடிக்கும் என்று சொல்ல முடியாத அளவிற்கு வன்முறைகள் உச்சகட்டத்தை நெருங்கியுள்ளன.

விடுதலைப்புலிகளும் இராணுவமும் போர் ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளதால் மக்கள் அதனுள் சிக்கி அல்லல்படுகின்றனர்.

போர் வெடித்தால் பொருளாதாரம் படு பயங்கரமாகப் பாதிக்கும் என ஜனாதிபதி தனது மன வேதனையை ஆலோசனை பெறுபவர்களிடம் கொட்டுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச–5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.